# ஜனாதிபதி செயலாளராக

## சமன் ஏக்கநாயக்க நியமனம்



ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான இவர், இறுதியாக பிரதமரின் செயலாளராக பணிபுரிந்தார்.

ரணில் ஜனாதிபதியான கையோடு, ஜனாதிபதியின் செயலாளராக இருந்த காமினி செனரத் பணியிலிருந்து விடைபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 23 சுபகிருது வருடம், ஆடி மாதம் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை (22.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 22, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


# தம்மிக்க பெரேரா இராஜினாமா

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



பெரேரா தனது இராஜினாமா கடிதத்தை சபாநாயகர் மற்றும் பெரமுனவின் பொதுச் செயலாளருக்கு அனுப்பியுள்ளார்.

ரணில் நிதியமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யவேண்டுமென தம்மிக்க பெரேரா முன்னர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# ஜனாதிபதியாக பதவியேற்றார் ரணில் விக்ரமசிங்க



•யோ.தர்மராஜ்

நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதம நீதியரசர் முன்னிலையில் நேற்று பதவி ஏற்றுக்கொண்டார். நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் ரணில், 134 வாக்குகளைப் பெற்று 52 மேலதிக வாக்குகளால் ஜனாதிபதிக்கான போட்டியில் வெற்றியீட்டினார்.

02 பக்கம்



எரிபொருளை கியூ.ஆர் முறைமையின் கீழ் வழங்கும் செயற்பாடு நேற்று கொழும்பில் ஆரம்பமானது. (படப்பிடிப்பு - கிரிஷான் காரியவசம்)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் ஐவரும் சஜித் அணியின் 14 பேரும் ஆதரவு

## ஹரின் பெர்னாண்டோ எம்.பி. பகிரங்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் ஐவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கக்கூடும் என்று முன்னாள் அமைச்சரான ஹரின் பெர்னாண்டோ எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அத்துடன், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் 14 எம்.பிக்கள் வரை ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினர் எனவும் அவர் கூறினார். இதில் 8 பேர் தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் என்ற தகவலையும் அவர் வெளியிட்டார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் ரணிலுக்கு ஆதரவாக 134 எம்.பிக்கள் வாக்களித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ரணிலின் கீழ் தற்காலிக அமைச்சரவை

## 15 பேருடன் இன்று பதவியேற்பு

### பிரதமராக தினேஷ் நியமிக்கப்படும் வாய்ப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசின் அமைச்சரவை இன்று பதவியேற்கிறது.

இன்று காலை பிரதமர் பதவியேற்பு இடம்பெறும். புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை, பிற்பகல் அமைச்சரவை பதவியேற்பு இடம்பெறும். ஏற்கனவே இருந்த அமைச்சர்கள் 15 பேர் இன்று பதவியேற்பர். இந்த அமைச்சரவை ஒருவாரகாலம்வரை நீடிக்கும். அதன்பின்னர் சர்வகட்சி அரசமைத்து அதன் அமைச்சரவை நியமனம் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், இன்று மாலை அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

# 19ஆவது திருத்த ஆவணம் விரைவில் கொண்டுவரப்படும்

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

நல்லாட்சி காலகட்ட அசல் 19ஆவது திருத்த ஆவணத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக அரசியலமைப்புக்குள் கொண்டுவர விரும்புவதாகவும் மேலும் அரசாங்கத்தையும் நாடாளுமன்றத்தையும் எம்.பிக்களைக்கொண்ட துறைசார் குழுக்களையும் அமைத்து நடத்த விரும்புவதாகவும் ஜனாதிபதி ரணில் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

02 பக்கம்

# இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வர ஐ.நா. வலியுறுத்தல்



சர்வதேச நிதி நிறுவனங்கள், தனியார் கடன் வழங்குவோர் மற்றும் ஏனைய நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை, நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதிப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ரணில் பதவியேற்றபோது தடைப்பட்ட நேரடி ஒளிபரப்பு

## சி.ஐ.டியிடம் விசாரணை ஒப்படைப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பதவிப் பிரமாண நிகழ்வின்போது நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடை தொடர்பான விசாரணை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் 8ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நேற்று முற்பகல் நாடாளுமன்ற...

02 பக்கம்

# பல்கலை மாணவர் சங்க இருவரை கைதுசெய்ய பிடியாணை உத்தரவு


அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் ரத்கரவ்வே ஜினரத்ன தேரர் ஆகியோருக்கு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே பிடியாணை ஒன்றை நேற்று பிறப்பித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோத ஆர்ப்பாட்டம் ஒன்று தொடர்பில் பொலிஸாரினால் குறித்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் ரத்கரவ்வே ஜினரத்ன தேரர் ஆகியோர் நீதிமன்றில் நேற்று ஆஜராகவில்லை.

இதனால் பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று நீதவான் இந்த பிடியாணையை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உஷ்



கட்சித்தலைவர்கள் கூட்டம் நேற்று நடந்தபோது பிரதமர் நியமனம் எப்போது? என்று ரணிலிடம் கேட்டாராம் மு.கா. தலைவர் ஹக்கீம்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில், நான் ஜனாதிபதி றோயலிஸ்ட் (றோயல் கல்லூரி பழைய மாணவர்), சஜித் ஒரு றோயலிஸ்ட், சபாநாயகர் ஒரு றோயலிஸ்ட், நீங்கள் கூட ஒரு றோயலிஸ்ட்... நீங்களே பிரதமர் பதவிக்கு போட்டியிடுங்களேன் என்று ஹக்கீமை பார்த்து தமாஷாக கூறினாராம்.

தனது வீடு எரிக்கப்பட்ட விடயத்தில் ஏற்கனவே ஹக்கீமுடன் விசனத்தில் இருந்த ரணில், ஜனாதிபதியான பின்னர் இப்போது சுமுகமாக நட்புடன் பழகுவதாக தகவல்.

# ஒழுங்குமுறையற்ற போராட்டங்கள் ரணிலை ஜனாதிபதியாக ஆக்கின

## விமல் வீரவங்ச தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

ஒழுங்குமுறையற்ற, திட்டங்களற்ற, ஞானமற்ற போராட்டத்தினால் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஏற்படுத்தப்பட்ட, பாதுகாப்பற்ற மனநிலையே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்ய காரணமென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்தார். கொழும்பிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில்...

02 பக்கம்

# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு சீனாவே காரணம்

## அமெரிக்க சி.ஐ.ஏயின் தலைவர் தெரிவிப்பு



இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு சீனாவின் கண்மூடித்தனமான கடன்பொறியே காரணமென அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. அமெரிக்க புலனாய்வுப் பிரிவான சி.ஐ.ஏயின் தலைவர் வில்லியம் ஜே பேர்ன்ஸ், கொலராடோ மாகாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே இக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். இலங்கையின் இந்த நிலை மற்ற நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

காலிமுகத்திடலையும் காலியாக்காம விடமாட்டார் போல ரணில் ஐயா...



# ரணிலுடன் இணைந்து பணியாற்றத் தயார்

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ ட்விட்டர் பதிவிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்த சவாலான காலங்களில், பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், ஜனநாயகம் மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் நிலையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவது அவசியமாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### இலங்கையின் பொருளாதார...

சீனாவின் கடன் பொறியில் சிக்கியதன் காரணமாகவே இலங்கை இன்று நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்த அவர், சீனா கூடுதல் வட்டிக்கு இலங்கையில் முதலீடு செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, சீனாவிடம் கடன் பெற்றுக்கொண்டு அபிவிருத்திகளை இலங்கை செய்தமையே இலங்கையின் பொருளாதார சரிவிற்கான பிரதான காரணி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சில முட்டாள்தனமான பந்தயங்களைச் செய்து அதன் விளைவாக பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகளில் மிகவும் பேரழிவைச் சந்திக்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது என்றும் பேர்ன்ஸ் தெரிவித்துள்ளார்.

### ரணில் பதவியேற்றபோது...

கட்டடத்தொகுதியில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அரச தொலைக்காட்சியான சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு (ஐரிஎன்) நேரலையாகவும், அதன் மூலம் மற்ற தொலைக் காட்சிகள் நேரடி ஒளிபரப்பு செய்யவும் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், ஜனாதிபதி நாடாளுமன்ற வளாகத்திற் குள் நுழைந்ததையடுத்து நேரடி ஒளிபரப்பு தடைப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக இந்த இடையூறு ஏற்பட்ட தாக பின்னர் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் மின் தடை ஏற்பட்டால் இரண்டு நிமிடங்களுக்குள் ஜெனரேட் டர்கள் தானாக இயங்குவது வழக்கம் எனவும், ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் போது சுமார் பத்து நிமிடங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவை நேரலையில் ஒளிபரப்ப அரச தொலைக் காட்சியால் முடியவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவின் பதவிப் பிரமாண நிகழ்வின்போது மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக வெளியான தகவலை நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னான்டோ நிராகரித்துள்ளார்.

“நாங்கள் மின்சாரத்தடை நேரத்தில் ஜெனரேட்டரைப் பயன்படுத்துகிறோம். வழக்கப்படி, ஜெனரேட்டர் மூலம் வழங்கப்பட்ட மின் பிரதான மின்பாதைக்கு நகர்த்தப்பட்டது. அரச தொலைக்காட்சி அலைவரிசையில் விழாவின் நேரடி ஒளிபரப்பில் கோளாறு இருப்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. என்ன தவறு நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. எனினும், நாடாளுமன்றத்தில் மின்தடை ஏற்பட வில்லை என்று நான் உறுதியளிக்கிறேன்” என்று அவர் கூறினார்.

### ஜனாதிபதியாக பதவியேற்றார்...

அதன்படி, நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொள்ளும் நிகழ்வு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக, காலை 9.45 மணியளவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் அவருடைய பாரியார் மைத்ரி விக்ரமசிங்க நாடாளுமன்ற வளாகத்திற்கு வருகை தந்தனர். இவர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் வரவேற்றனர்.

இதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு முப்படைகளின் மரியாதை செலுத்தப்பட்டது. மரியாதையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்திலுள்ள ஜனாதிபதி காரியாலயத்திற்கு முன்னால் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்றுக்கொண்டார்.

இந்த பதவியேற்பு நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட டலஸ் அலகப்பெரும, சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## பெயர் மாற்றம்

**நுவரெலியா மாவட்ட அம்பகமுவ செயலாளர் பிரிவில் மஸ்கெலியா மவுசாக்கல தோட்ட சீர்ப்பாதப்பிரிவு (கிராமசேவகர் பிரிவு 320/I (ஜ))உள்ள பெருமாள் சிவாஜிகணேசன் என சகல ஆவணங்களிலும் உள்ளது. எனது மகள் ஷாரா வைஷ்ணவியின் பிறப்புச்சான்றிதழில் பெருமாள் கனேஷன் ஷாரா வைஷ்ணவி என்று உள்ளதை சிவாஜி கணேசன் ஷாரா வைஷ்ணவி என இனிவரும் காலங்களில் இன்று முதல் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் இலங்கை வாழ் மக்களுக்கும் அறியதருகிறேன். ஒப்பம். சிவாஜி கணேசன் ஷாரா வைஷ்ணவி.**




# பிரிட்டன், அவுஸ்திரேலிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்க உறுதி

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னர், இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹோல்டன் மற்றும் இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

இங்கிலாந்து உயர்ஸ்தானிகராலயம் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் ட்விட்டர் பதிவுகள் மூலம் இது தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

“அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கான அழைப்புகள் உட்பட அனைத்து இலங்கையர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற இங்கிலாந்து எதிர்பார்த்துள்ளது.

அமைதியான போராட்டத்துக்கான உரிமை உட்பட ஜனநாயக மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சியைப் பாதுகாக்க அனைத்து தரப்பினரையும் வலியுறுத்துங்கள்” என்று ஹோல்டனின் ட்வீட் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் ஜனாதிபதி, ஜனநாயக அரசியலமைப்பு செயற்பாட்டின் ஊடாக தெரிவு செய்யப்பட்டதாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க இலங்கையின் ஜனாதிபதியாக ஜனநாயக அரசியலமைப்பு செயற்பாட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியா இப்போது புதிய அரசாங்கத்தை சர்வதேச நாணய நிதியம் உட்பட நீண்ட கால பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வேலை செய்ய ஊக்குவிக்கிறது.

இலங்கை மக்களுக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்து ஆதரவளிக்கும்” என அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டுவீட் செய்துள்ளார்.





சீன - இலங்கை நட்புறவு சங்கத்தினால் கோட்டே மாதிவெல பகுதியிலுள்ள வறிய மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் நேற்று கையளிக்கப்பட்டன. (படப்பிடிப்பு - லலித் பெரேரா)

# ஜனாதிபதி ரணிலின் வீடு எரிக்கப்பட்டமை தொடர்பில் உதவியை கோரும் பொலிஸார்

சட்டவிரோதமாக பிரவேசித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீ வைத்தமை தொடர்பில் பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளது.

இல்லத்துக்கு தீ வைத்தமை மற்றும் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் விபரங்கள் தெரிந்தவர்கள் 071-8594950 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு தீவைப்பு தொடர்பான புகைப்படங்கள் அல்லது காணொளிக் காட்சிகளை வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர். இச் செய்தியை பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. கடந்த 9ஆம் திகதி ரணில் விக்ரமசிங்கவின் வீடு எரியூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ஒழுங்குமுறையற்ற...

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் போராட்டத்தின் விளைவாகவே, தேர்தலில் வெற்றிபெற்ற கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதாக கூறுகின்றனர். ஆனால், போராட்டத்தினால் இறுதியில், தேர்தலில் வெற்றி யடைந்த கோட்டாபய வீட்டுக்கு அனுப்பப்பட்டு, தேர்தலில் தோல்வியடைந்த ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதி கதிரைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

9ஆம் திகதிகளே போராட்டத்தின் வெற்றியெனக் கூறுகின்றனர். ஆனால், மே 9ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தின் பிரதிபலனாக ரணில் விக்ரமசிங்க, பிரதமராக பொறுப்பேற்றார். ஜூலை 9ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தின் பிரதிபலனாக பதில் ஜனாதிபதியாகி, தற்போது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினால், அப் பதவிக்கு வேறொருவர் வரக்கூடும். அது நாட்டை அராஜகத்துக்கு எடுத்துச்செல்லும் என்பதாலேயே, ஜனாதிபதி மாளிகை முற்றுகையிட்ட சந்தர்ப்பத்தைத்தவிர, அதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி விலகக்கூடாது என்றே நாங்கள் கூறினோம். இதனை புரிந்துகொள்ளுமளவுக்கு போராட்ட இளைஞர்களுக்கு சுய சிந்தனை இருக்கவில்லை.

இறுதியில், தன்னுடைய ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடவந்த போராட்டக்காரர்களுக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுமாறு உத்தரவிடாத ஜனாதிபதி வீட்டுக்குச் சென்று, போராட்டக்காரர்களுக்கு பருப்பை சாப்பிட கொடுக்கும் ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒழுங்குமுறையற்ற, திட்டங்களற்ற, ஞானமற்ற போராட்டத்தின் விளைவாக நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை உறுப்பினர்களால் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்றத்திலுள்ள 134 பேரும் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்தது ஏன்? சில சில தனிப்பட்ட காரணங்கள் இருந்தாலும் பொதுவானதொரு காரணமுள்ளது. அதாவது, உறுப்பினர்களிடையேயுள்ள பாதுகாப்பற்ற மனநிலையே காரணமாகும்.

உறுப்பினர்களின் வீடுகள் தீவைக்கப்பட்டு, அவர்களால் கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை, சென்றால் காட்டுமிராண்டித் தனமாக தாக்க வருகின்றனர் என்ற அச்சம் இருந்தது. எனவே, ஏனையவற்றுக்கு முன்பாக இந்த நிலைமையை இல்லாதொழிக்க வேண்டும் என நினைத்தால், அதற்கு சரியான நபர் ரணில் விக்ரமசிங்கவே எனக்கருதி, 134 உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்தமைக்கான பொதுவான காரணமாகும். இதற்கு போராட்டக்காரர்களே பொறுப்பாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரமல்லாது, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல கட்சிகளின் உறுப்பினர்கள் சேர்ந்து 134 வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கு பிரதான காரணம் பாதுகாப்பற்ற மனநிலையாகும்.

குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை விட்டு வெளியேறிய சந்தர்ப்பத்தில், ஒரு குறிப்பிட்ட குழுவினரால் நாடாளுமன்றத்தை சுற்றிவளைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது, அதற்கு இடமளிக்காது, அவசரகால நிலைமை மற்றும் ஊடரங்கு சட்டத்தை அமுல்படுத்திய ரணில் விக்ரமசிங்கவையே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்புகின்றனர். இந்த விருப்பத்தை ஏற்படுத்தியதும் போராட்டக்காரர்களே. பாதுகாப்பற்ற நிலைமையினாலேயே ரணில் விக்ரமசிங்கவை தெரிவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. டலஸ் அலகப்பெரும ஜனநாயகவாதி என்றே நினைத்தனர்.

நியாயமான போராட்டம் முன்னெடுக்கும் போது, ஞானத்துடன் சிந்திக்கக்கூடிய தலைமைத்துவம் அவசியமாகும். இல்லையேல், அதன் இலாபத்தை மற்றொருவர் எடுத்துக்கொள்வார். அவ்வாறே, ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரால் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என எங்களுக்கு நம்பிக்கையில்லை. எனவே, மக்கள் நம்பிக்கைபெற்ற குழுவினர் நாட்டுக்கு அவசியமாகும். இதனாலேயே நாங்கள் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு யோசனை முன்வைத்துள்ளோம் - என்றார்.




### 19ஆவது திருத்த ஆவணம்...

பதவியேற்புக்குப் பின்னர் நேற்றுக்காலை நாடாளுமன்ற கட்டிடத்தொகுதியில் கட்சித் தலைவர்களை சந்தித்த ரணில், விரைவில் சர்வகட்சி ஆட்சியொன்றுக்கு செல்லவுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளை தீர்க்க வேண்டியிருக்கிறது.

அதற்கு விரைந்து செயற்படவேண்டும். இன்னும் சில வாரங்களுக்குள் அரசும். புதிய அமைச்சரவையும் அறிவிக்கப்படும். அனைத்துக் கட்சிகளும் இந்தப் பிரச்சினைகளை தீர்க்க ஒத்துழைக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளார் ரணில்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை 24மணி நேரத்திற்கு ஒத்திவைத்து அடுத்தக் கூட்டம் ஆரம்பமாகும்போது ஜனாதிபதியின் அக்கிராசன உரை இடம்பெறவேண்டும் என்று ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுமாயின், நாடாளுமன்ற குழுக்கள் கலைந்துவிடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டி அதனை ஆட்சேபித்துள்ளார். எவ்வாறாயினும் இதனை நாடாளுமன்ற சம்பிரதாயங்களின்படி, சட்டப்படி செய்யவேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியாக நியமனம் பெற்ற ரணிலின் எம்.பி. பதவி வெற்றிடம்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலம் அறிவித்தார் நாடாளுமன்ற செயலாளர்

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடம் தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருப்பதால் அந்தப் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

இந்நாட்டின் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், இதனால் 2022 ஜூலை 21ஆம் திகதிமுதல் அதாவது, நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும்வகையில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் ரணில் விக்ரமசிங்க கடிதம் மூலம் தனக்கு அறிவித்திருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 66 (இ) உறுப்புரையின் பிரகாரம் ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதனால் 1988ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நாடாளுமன்ற தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) பிரிவின் கீழ் நாடாளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

# பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி விஜயம்







ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பதவிப்பிரமாண நிகழ்வைத் தொடர்ந்து நேற்று (21) கோட்டை ஸ்ரீ ஜயவர்தன புரவிலுள்ள பாதுகாப்புத்தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு விஜயம் செய்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகைதந்த ஜனாதிபதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன வரவேற்றார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் அரச நிறுவனமொன்றுக்கு தனது முதல் விஜயத்தை மேற்கொண்டு பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்து பாதுகாப்பு உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார்.

நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நேற்றுக் காலை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் டிரான் அலஸ், சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வுத் தலைவர், அரச புலனாய்வுச் சேவை பணிப்பாளர் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கான கியூ.ஆர். கோட் அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு

## வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக கியூ.ஆர். கோட் அமைப்பு நேற்று வெற்றிகரமாக சோதிக்கப்பட்டதாகவும் இந்த வேலைத்திட்டம் அடுத்த வாரம் முதல் தேசிய அளவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டே இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தொழில்நுட்ப சிக்கல்களுக்குப் பிறகு, எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக கியூ.ஆர். கோட் அமைப்பு நேற்று வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. அடுத்த வாரம்முதல் தேசியளவில் இந்தத் திட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்படும். நாடளாவிய ரீதியில் வாகன தகட்டின் இறுதி இலக்கத்தினூடாக எரிபொருள் வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த சில நாட்களில் துரிதப்படுத்தப்படும்.

இந்த விடயத்தக்கு ஆதரவளித்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், இதனை ஏற்றுக்கொண்ட - அதற்கு உதவிய பொதுமக்கள், பாதுகாப்புப் படைகள் மற்றும் செயல்படுத்த உதவிய தன்னார்வலர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில எரிபொருள் நிலையங்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சிலர் இதனை பொய்யாக்கினார்கள். செயல்படுத்த விரும்பவில்லை. எனினும், நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ரயில்வே இருக்கை முன்பதிவு காலத்தை 14 நாட்களாக நீடிக்க தீர்மானம்

புகையிரத ஆசன ஒதுக்கீடு செய்யும் கால வரையறையை 14 நாட்கள்வரை நீடிப்பதற்கு புகையிரதத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள பிரதி முகாமையாளர் வீ.எஸ்.பொல்வத்தகே மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நேற்று (21) காலையிலிருந்து ஆசன ஒதுக்கீட்டு கட்டமைப்பினூடாக ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதிவரை சகல ஆசன ஒதுக்கீட்டு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும் என்பதுடன் பின்னர் வழமைபோல் ஆசன ஒதுக்கீட்டு காலவரையறை 14 நாட்களாக நடைமுறைப்படுத்தப்படும். நாட்டில் இடம்பெற்ற நெருக்கடி நிலைமையின் காரணமாக எதிர்காலத்தில் புகையிரத போக்குவரத்து திட்டம் பிரச்சினைக்குரிய விடயம் என்பதால் அதனூடாக சிரமத்துக்குள்ளாவது தொடர்பில் கவனத்தில் கொண்டு, ஆசன ஒதுக்கீடு காலவரையறை 7 நாட்கள் வரை குறைப்பதற்கு புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டின் நிலை மீண்டும் வழமைக்குத் திரும்பி வரும் நிலையில் பயணிகளின் கோரிக்கைக்கமைய மீண்டும் இந்த காலவரையையறை நீடிப்பதற்கு அந்தத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# போக்குவரத்து சபையின் சேவைகள் திங்கள் முதல் வழமைக்குத் திரும்பும்

இலங்கை போக்குவரத்து சபை சந்தித்துள்ள ரயர் மற்றும் பெட்டரி தட்டுப்பாடு தற்போது சீராக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பஸ் போக்குவரத்து சேவை சீறராக முன்னெடுக்கப்படுமென போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

போக்குவரத்து சபை சந்தித்துள்ள ரயர் மற்றும் பெட்டரி தட்டுப்பாட்டின் காரணமாக 5,000 பஸ்களில் 2000 ஆயிரம் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை என்றும் அதற்கமைய, தூர போக்குவரத்து சேவை நூற்றுக்கு 80 வீதம் வரையில் கைவிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ரயர்கள் மற்றும் பேட்டரிகள் வாங்குவதற்கான கொள்முதல் நடவடிக்கையில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# பேருவளை கெச்சிமலை தர்ஹாஷரீப் அஷ்ஷேஹ் காலிப் அலவி பின் அஷ்ஷேஹ் முஹம்மத் காலமானார்

( பீ.ம்.முக்தார்)



இலங்கையில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை கெச்சிமலை தர்ஹாஷரீப் அஷ்ஷேஹ் காலிப் அலவி பின் அஷ்ஷேஹ் முஹம்மது அப்துல்லாஹ் (அலவியதுல் காதிரி) அவர்கள் 93ஆவது வயதில் காலமானார்.

இவர் பலவருட காலம் மேற்படி தர்காவில் புனித ஸஹீஹூல் புஹாரி – முஸ்லிம் மஜ்லிஸை தலைமை தாங்கி நடத்தி வந்தார். அன்னார், மக்கொனையைச் சேர்ந்த மர்ஹூமா ஹாஜியானி ஸித்தி பாத்திமாவின் அன்புக் கணவரும் மர்ஹூம் அஷ்ஷேஹ் அல்ஹாஜ் முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் (அலவியதுல் காதிரி) ஹாஜியானி மர்ஹூமா பாத்திமா தம்பதிகளின் அன்பு மகனும், மர்ஹூம் அஷ்ஷேஹ் அல்ஹாஜ் ஹம்ஸா ஆலிம் பின் அஷ்ஷேஹ் முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் (அலவியதுல் காதிரி), மர்ஹூம்களான ஹாஜியானி உபாபா அலவி, அல்ஹாஜ் ஸாலிம் பின் அப்துல்லாஹ், அல்ஹாஜ் புலைல் பின் அப்துல்லாஹ், ஹாஜியானி அமீனா, அல்ஹாஜ் அஷ்ஷேஹ் ஷிஜப் பின் அப்துல்லாஹ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அல்ஹாஜ் ஆஸிம் அலவி, அல்ஹாஜ் மனார், அல்ஹாஜ் ஸூமைர், அல்ஹாஜ் பௌஸான், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் இலங்கை வக்பு சபை உறுப்பினருமான அஷ்ஷேஹ் அல்ஆலிம் ஸகீ அஹ்மத் அஷ்ரபி (அலவியதுல் காதிரி), ஹாஜியானி பாத்திமா ஷஹீனா ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார். அன்னாரின் ஜனாஸா மக்கொனை இல்லத்திலிருந்து நேற்று (21 ) கெச்சிமலை தர்ஹாவில் முஹிப்பீன்கள் முரீதீன்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அஸர் தொழுகையை தொடர்ந்து மொல்லியமழை ஹிழ்ரிய்யா ஜும்ஆ மஸ்ஜித் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், அரசியல்வாதிகள் பெருமளவிலான முஸ்லிம், சிங்கள மக்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மற்றும் அரபுக்கல்லூரி அதிபர்கள், மாணவர்கள், விரிவுரையாளர்கள் பெருமளவிலானோர் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 33 பேர் கைது



நீர்கொழும்பை அண்மித்த கடல் பிரதேசத்தில் நேற்று (21) கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 33 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை நீர்கொழும்பை அண்மித்த கடல் பிரதேசத்தில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, நீண்டநாள் மீன்பிடி படகொன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது, அந்த நீண்டநாள் மீன்பிடி படகிலிருந்த சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் நீண்டநாட்களாக மீன்படி படகில் பணியாற்றிய நால்வர் உள்ளிட்ட ஆண்கள் 19 பேரும், பெண்கள் 09 பேரும், சிறுவர்கள் ஐவருடன் 33 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சிலாபம், மாரவில, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 முதல் 65 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டள்ளனர். அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புத் துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் பாதுகாப்பற்ற கப்பல்களைப் பயன்படுத்தி கடத்தல்காரர்களால் நடத்தப்படும் இவ்வாறான ஆட்கடத்தலில் சிக்கி, தங்கள் உயிரைப் பணயம் வைத்து, சட்டத்தின் முன் தண்டனை பெறுவதைத் தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களுக்கு வலியுறுத்தியுள்ளது.

# பங்கீட்டு அட்டை முறையினை பலர் குழப்ப முனைகின்றனர்

## எரிபொருள் விநியோகம் குறித்து யாழ். மாவட்ட செயலர்

(யாழ். நிருபர்)

பொதுமக்கள் பலரும் எரிபொருள் பங்கீட்டு அட்டை முறைமையின் நன்மைகளை வரவேற்கும் சமயம் ஒருசிலர் இந்தத் திட்டத்தை குழப்புவதற்கு முனைவதையும் நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே, அனைவரும் ஒத்துழைத்து இந்த முறைமை மூலம் சீரான எரிபொருள் விநியோகத்தை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும் - என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே மாவட்ட செயலர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெற்றோல் விநியோகத்தைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக எதிர்வரும் 29ஆம் திகதிவரை நாளாந்தம் 15 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது. மக்கள் எந்தவித நெருக்கடியையும் ஏற்படுத்தாது அமைதியாக இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும்.

டீசலை பொறுத்தவரை 8 தொடக்கம் 10 வரையான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 25ஆம் திகதிவரை தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதற்குரிய அட்டவணை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ளது .

இன்று எரிபொருள் விநியோகம் ஆரம்பித்திருக்கின்ற நிலையில், பொதுமக்கள் ஒன்றுகூடி நெருக்கடியை ஏற்படுத்துவதாகவும் அதேபோன்று எரிபொருள் பெறுவதற்குரிய விதிமுறை மற்றும் அறிவுறுத்தலை பின்பற்றாமலும் இருப்பதால் அங்கு ஒரு குழப்பமான நிலை உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டிருக்கின்றன.

ஆகவே, எரிபொருளை பெற்றுக்கொள்ளும் பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசாங்கத்தினால் தேசிய எரிபொருள் விநியோக அனுமதிப்பத்திர முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக 25ஆம் திகதிக்கு பின்னதாக கட்டாயமாக அமுலில் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால், அந்த முறைமை முழுமையாக அமுல்படுத்தும் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே பிரதேச செயலாளர்களால் வழங்கியிருக்கின்ற எரிபொருள் விநியோக அட்டைகளை பயன்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இது யாழ்ப்பாண மாவட்டத்திற்கான விசேட ஏற்பாடு. இதை தேசிய முறைமையுடன் இணைந்த வகையில் கொண்டுசெல்ல முடியும். நெருக்கடியை குறைப்பதற்கு அனைவருக்கும் முறையாக இந்த பங்கு அட்டை முறைமையை அமுல்படுத்தியிருக்கின்றோம். வாகன இலக்க தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் இந்த விநியோகம் இடம்பெறும்

எரிபொருள் விநியோக அட்டைகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றோம்.

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தை மிக மிக அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகிக்க ஒதுக்கியிருக்கின்றோம். அதில் எரிபொருளை நிரப்ப மாவட்ட செயலகத்தின் முன் அனுமதியை பெற்றிருக்க வேண்டியது அவசியம். பொதுமக்கள் பலரும் இந்த திட்டத்தினாலான நன்மைகளை வரவேற்கும் சமயம் ஒருசிலர் இந்தத் திட்டத்தை குழப்புவதற்கு முனைவதையும் நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே, அனைவரும் ஒத்துழைத்து இந்த முறைமை மூலம் சீரான விநியோகத்தை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# ஹாஜியார் அலவியதுல் காதிரியின் மறைவு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பாகும்

## இம்தியாஸ் பாக்கிர் மக்கார் எம்.பி. அனுதாபம்

(பி.எம். முக்தார்)

அலவிய்யாத் தரீக்காவின் ஆன்மீகப் பெரியார் அஷ்ஷெய்ஹ் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரியின் மறைவு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பாகும் - என நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது,


இலங்கைத் திருநாட்டில் மூத்த ஆன்மீகப் பெரியார்களில் ஒருவரான மர்ஹூம் அஷ்செய்ஹ் காலிப் அலவி ஹாஜியார் ஆன்மீக, சமய, சமூக மேம்பாட்டிற்காக 50 வருடங்களுக்கு மேல் ஆற்றிய பணிகள் மகத்தானதாகும். அலவீய்யாத் தரீக்காவின் ஆன்மீகத் தலைவராக திகழ்ந்த மர்ஹஹூம் அஷ்ஷெய்ஹ் அப்துல்லாஹ் ஹாஜியாரின் புதல்வரும் அஷ்ஷெய்ஹ் ஹம்ஸா ஆலிமின் சகோதரருமான இவர், அலவிய்யாத் தரீக்காவின் வளர்ச்சிக்கும் பொதுவாக சமூகத்தின் மறுமலர்ச்சிக்கும் மிக அமைதியான முறையில் நிறையவே பணிகளைச் செய்தார்.


எனது தந்தையுடனும் என்னுடனும் மிக அன்பாக நடந்துகொண்டதோடு அடிக்கடி புத்திமதிகளையும் கூறுவார். எப்போதும் முகத்தில் புன்னகையுடன் சிறுவர்முதல் பெரியோர்வரை நன்றாக பழகக்கூடியவராகத் திகழ்ந்தார். கெச்சிமலை தர்ஹாவை சூழவுள்ள சிங்கள மக்களினாலும் கௌரவமாக மதிக்கப்பட்டு வந்தார். பிரதேச பௌத்த மக்களுடன் சிறந்த உறவைப் பேணி இரு சமூகங்களுக்கு இடையில் ஓர் இணைப்புப் பாலமாகவும் செயல்பட்டு வந்ததை மறக்க முடியாது.


சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக்கொண்டிருந்த இவர், வரலாற்று புகழ்மிகு கெச்சிமலை தர்ஹாவில் புனித ஸஹீஹூல் புகாரி மஜ்லிஸை பல வருட காலமாக சிறப்பாக தலைமை தாங்கி நடத்தி வந்தார். அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் மக்கள் உள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்பார் என்பதில் சந்தேகமில்லை. பேருவளை பிரதேசத்திற்கும் அலவிய்யாத் தரீக்காவிற்கும் ஒரு பாரிய வெற்றிடத்தை அவர் விட்டுச் சென்றுள்ளார். தனது மறுமை வாழ்விற்காக நிறைய சம்பாதித்துவிட்டு பிரிந்துள்ள அவருக்கு மறுமையில் உயர் அந்தஸ்தை எல்லாம் வல்ல இறைவன் வழங்குவானாக. ஆமீன் - என்று தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் தொடர்பில் தேடப்படும் நபர்கள்

## பொதுமக்களின் உதவியை நாடும் பொலிஸ்







போதைப்பொருள் விநியோகம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்படும் நபர்கள் குறித்து பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளதுடன் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

எம்பிலிபிட்டிய பொலிஸாரால் கடந்த 11ஆம் திகதி 38 கிலோ 360 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகத்தின்பேரில் ஆணொருவரும் பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூவர் இதனுடன் தொடர்புபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் ஆண் ஒருவரதும் இரு பெண்களினதும் தகவல்கள் அறிந்தோர் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மித்தெனியவைச் சேர்ந்த பெக்கோ சமன் என்றழைக்கப்படும் நெதுன்கொடகே நிர்மல பிரசங்க என்ற 33 வயதுடைய நபர், எம்பிலிபிட்டியவைச் சேர்ந்த பத்தினிகே சாஜிகா லக்ஷானி என்ற 27 வயதுடைய பெண் மற்றும் எம்பிலிபிட்டிய புதிய நகரத்தைச் சேர்ந்த நிஷாந்தி அபேசேகர ஆகியோரே சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் தேடப்படுவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 071 8592727, 011 23433333, 071 8591881 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக நேற்றைய தினம் பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார். நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலமாக தெரிவுசெய்யப்பட்ட முதல் ஜனாதிபதியான அவரின் பதவியேற்பு வைபவம் நாடாளுமன்ற வளாகத்திலேயே இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்ட பிறகு, 28 வருடங்களாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி அந்த கட்சியிடமிருந்து விலகிக்கொண்டே வந்தது. 1999 டிசம்பர் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை எதிர்த்தும் 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்தும் இரு தடவைகள் போட்டியிட்டு தோல்வியடைந்த விக்ரமசிங்க, அதற்கு பிறகு ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட முன்வரவில்லை.

2010 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலிலும் 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் எதிரணியின் பொதுவேட்பாளர்களாக களமிறக்கப்பட்டவர்களையே அவரது அணி ஆதரித்தது. 2019ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணி சார்பில் சஜித் பிரேமதாசவே போட்டியிட்டார். இரு தடவைகள் தோல்விக்கு பிறகு ஜனாதிபதித் தேர்தல்களில் களமிறங்குவதற்கு ரணில் ஒருபோதும் முன்வரவில்லை. தன்னால் வெற்றிபெறமுடியாது என்பதை அவர் தெளிவாகப் புரிந்துகொண்டவராக அரசியல் நகர்வுகளைச் செய்தார்.

1993 மே தினத்தன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தற்கொலை குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டபோது, அன்றைய பிரதமர் டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றார். அவரது பதவியை நாடாளுமன்றம் ஏகமனதாக அங்கீகரித்த பிறகு ரணில் விக்ரமசிங்க முதன்முதலாக பிரதமராக பதவியேற்றார். அதற்கு பின்னரான சுமார் மூன்று தசாப்தகாலத்தில் 06தடவைகள் பிரதமர் பதவியை அவர் வகித்த போதிலும், முழுமையாக ஒரு பதவிக்காலத்தையும் நிறைவுசெய்யக்கூடியதாக இருக்கவில்லை.

அவரின் தலைமையில் தேர்தல்களில் வெற்றிப்பெற இயலாது என்று நம்பிய ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகள் பலரும் அவரை விட்டு விலகி ராஜபக்ஷக்களுடன் சேர்ந்துகொண்டனர். ராஜபக்ஷக்களின் அரசாங்கங்களில் முக்கிய பதவிகளில் இருந்த பலர் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

இறுதியாக, 2020ஓகஸ்ட் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியவில்லை. தேர்தல் வரைபடத்தில் இருந்து அந்தக் கட்சி துடைத்தெறியப்பட்டது. நாடளாவிய ரீதியில் கிடைத்த சுமார் இரண்டரை இலட்சம் வாக்குகளின் அடிப்படையில் கட்சிக்கு ஒரேயொரு ஆசனமே கிடைத்தது. அப்போது விக்ரமசிங்கவின் அரசியல் முடிவு வந்துவிட்டது என்றே பரவலாக கருதப்பட்டது. ஆனால், தேசியப்பட்டியல் ஆசனத்தை பயன்படுத்தி ஒரு வருடத்துக்கு முன்னர் நாடாளுமன்றம் வந்த அவர், ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கத்தில் பிரதமராக பதவியேற்று இன்று நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவும் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிறார். இந்த அரசியல் அதிசயத்தை அவரைத் தவிர இலங்கையின் சமகால அரசியல்வாதிகளில் எவரினாலும் நிகழ்த்திக் காட்டியிருக்கமுடியாது எனலாம்.

நாடாளுமன்றத்துக்கு முதன்முதலாக தனது 28ஆவது வயதில் தெரிவான விக்ரமசிங்க, சரியாக 45 வருடங்களுக்கு பிறகு நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

எந்த ராஜபக்ஷக்களின் அரசியல் விக்ரமசிங்கவை சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கில்லாதவராக்கியதோ அதே ராஜபக்ஷக்கள் இப்போது தங்களது

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூலை 22ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ஜனாதிபதி ரணில் முன்னாலுள்ள சவால்கள்

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் அவரை ஜனாதிபதியாக்கியிருக்கிறார்கள். நேற்று முந்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் விக்ரமசிங்கவுக்கு 134 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டலஸ் அலகப்பெருமவுக்கு 82 வாக்குகளும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு 03 வாக்குகளும் கிடைத்தன.

வாக்கெடுப்பின்போது கடைப்பிடிக்கவேண்டிய நிலைப்பாடுகள் தொடர்பில் கட்சிகளின் தலைவர்கள் உத்தியோகபூர்வமாக தீர்மானங்களை அறிவித்தபோதிலும், பெரும்பாலும் பொதுஜன பெரமுனவைத் தவிர வேறு எந்தவொரு கட்சியினதும் கணிசமான எண்ணிக்கை உறுப்பினர்கள் தலைமையின் தீர்மானங்களின் பிரகாரம் தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்யவில்லை என்பது விக்ரமசிங்கவுக்கு கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையின் மூலமாக வெளிப்படுகிறது. அவரின் அரசியல் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் ஆதரிக்கின்ற கட்சி என்று தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் எதையும் அடையாளப்படுத்தமுடியாது.

ஆனால், அவர்கள் விக்ரமசிங்கவுக்கு பெருமளவில் வாக்களித்து ஜனாதிபதியாக்கியிருப்பது நாட்டின் இன்றைய அசாதாரண சூழ்நிலையை பிரகாசமாக பிரதிபலித்திருக்கிறது.

ஜனாதிபதியாக தெரிவான மறுகணமே விக்ரமசிங்க, ஒன்றிணைந்து செயற்பட்டு நாட்டை அதன் வரலாறு காணாத பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்க முன்வருமாறு கட்சிகளின் தலைவர்களுக்கு சபையில் அழைப்புவிடுத்தார். அடுத்த பணியாக சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டியிருக்கிறது.

அதற்கு நாட்டின் இன்றைய இடர்மிகு நிலையை மனதிலிருத்தி, மக்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாஷைகளையும் மதித்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் செயற்படவேண்டும் என்பது எமது வேண்டுகோளாகும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு அரசாங்கத்திடம் நிவாரணம் கேட்டு வீதிகளில் இறங்கி மக்கள் செய்யத்தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள், நாளடைவில் முக்கிய அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கின்ற மக்கள் கிளர்ச்சியாக மாறி அரசியல் புரட்சியொன்றின் பரிமாணங்களை எடுத்தது. அதையடுத்து, நாட்டிலிருந்து ஜனாதிபதி தப்பியோடிய பின்னரான முன்னென்றும் இல்லாத வகையிலான நெருக்கடிகள் நிறைந்த சூழ்நிலையிலேயே தான் ஜனாதிபதியாக பதவியேற்றிருப்பதை உணர்ந்தவராக விக்ரமசிங்கவின் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் அமையவேண்டும்.

கோட்டாபயவை மாத்திரமல்ல, விக்ரமசிங்கவையும் கூட பதவி விலகவேண்டும் என்றே ‘அரகலய’ மக்கள் கிளர்ச்சிப் போராட்டக்காரர்கள் கோரினார்கள். இப்போது விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னரும் அவர்களின் கோரிக்கையில் மாற்றம் இல்லை. மக்களின் ஆணையை இழந்துவிட்ட நாடாளுமன்றம் தெரிவுசெய்த ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய தார்மீக நியாயப்பாடு குறித்து போராட்டக்காரர்கள் கேள்வியெழுப்புவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அமைதிவழியில் போராடுகின்றவர்களின் அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் செவிமடுக்கத் தயாராயிருப்பதாக ஜனாதிபதி விக்ரமசிங்க கூறியிருக்கின்றபோதிலும், அந்த மக்கள் கிளர்ச்சி முழுமையையும் அவர் எவ்வாறு கையாளப்போகிறார் என்பதிலேயே அடுத்துவரும் அரசியல் நிகழ்வுப்போக்குகள் தங்கியிருக்கின்றன.

நாட்டு மக்களின் சீற்றம் தனிப்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிரானதல்ல, தவறான ஆட்சிக்கு எதிரானது. அசாதாரண சூழ்நிலைகள் அசாதாரண அணுகுமுறைகளையும் தீர்வுகளையும் வேண்டிநிற்கின்றன என்பதை தாராளமாக விளங்கிக்கொள்ளக்கூடிய அரசியல் அனுபவமும் விவேகமும் கொண்டவர் விக்ரமசிங்க என்பதில் சந்தேகமில்லை.

மக்கள் கிளர்ச்சிப் போராட்டக்காரர்களினால் முன்வைக்கப்படுகின்ற அரசியல் முழக்கங்களில் பெருமளவானவை பரந்தளவில் நாட்டுமக்களின் ஆதரவைப் பெற்றிருக்கின்றன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டும்; மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய ஆட்சிமுறையைக் கொண்ட புதிய அரசியல் கலாசாரம் தோற்றுவிக்கப்படவேண்டும்; முறைமை மாற்றம் வேண்டும் என்பவை அந்த கோரிக்கைகளில் முக்கியமானவை.

புதிய ஜனாதிபதியும் பதவியேற்கக்கூடிய புதிய அரசாங்கமும் இவற்றை முழுமையாக உணர்ந்தவர்களாக உருப்படியான அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் உடன் அக்கறை காட்டவேண்டும். அதேவேளை, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான பயனுறுதியுடைய திட்டங்களை வகுத்து குறுகியகால அடிப்படையிலும் நீண்டகால அடிப்படையிலும் தீர்வுகளுக்கு வழிகாட்டவேண்டும்.

கட்சி அரசியல் மாச்சரியங்களை ஒதுக்கிவைத்துவிட்டு தற்போதைய நாடாளுமன்றம் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயற்படும் என்பதில் பலத்த சந்தேகம் நிலவுகின்றபோதிலும், ராஜபக்ஷக்களின் வீழ்ச்சிக்கு பின்னரான காலகட்டத்தில் வழமையான அரசியலுக்கு இடமில்லை என்பதையும் அரசியல் விழிப்புணர்வுடைய மக்களின் உன்னிப்பான அவதானிப்பின் கீழேயே அரசாங்கங்கள் இனிமேல் செயற்படவேண்டியிருக்கு ம் என்பதையும் ஜனாதிபதியும் அரசியல் கட்சிகளும் புரிந்துகொள்வது அவசியம் என்பதை ‘தமிழன்’ கூறிவைக்க விரும்புகிறான்.



# காலிமுகத்திடல் இளைஞர் எழுச்சிப் போராட்டம் கற்றுத்தந்த பாடம் என்ன?

ஆசியாவின் முத்து என வர்ணிக்கப்பட்டு இந்த நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி சர்வதேச சமூகமும் இயற்கையோடு கூடி வாழ்வதற்கு உகந்த நாடாகவும் திகழ்ந்து கொண்டிருக்கும் நாடுதான் இலங்கையாகும். வளர்முக நாடாக இருந்தாலும் கல்வியிலும், தொழில்துறைகளிலும் பல வெற்றிகளை கண்டுகொண்டு நவீனத்துவத்திற்கும் ஈடுகொடுத்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அபிவிருத்தி நாடாக மட்டுமல்லாது, சர்வதேச மக்களின் கவனத்தை ஈர்த்த அவர்களின் விடுமுறைகளை செலவிடும் ஒரு நாடாகவும் இலங்கை முக்கியத்துவம் பெற்றுவந்துள்ளது.

பல்லின சமூகங்களைக்கொண்ட ஜனநாயக ஆட்சியதிகாரங்களை உள்ளடக்கிய அரசியலமைப்பைக் கொண்ட இந்த நாட்டில் கடந்த சில காலமாக ஆட்சியில் வந்த அரசாங்கங்கள் மக்களின் நலன்களில் அக்கறை காட்டாத ஒருவகையான சுயநல அரசியல் கலாசாரத்தை மேலோங்கச் செய்யும் தன்மைகொண்ட விடயங்களை முன்னோக்கியதான நகர்வுகள் இலங்கையின் வீழ்ச்சிப்போக்கிற்கு வித்திட்டது எனலாம்.

அரசியல் ஆய்வாளர்களின் கருத்துகளின்படி, அண்மைய காலத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் அதன் அரசியல் தலைமைகளும் பக்கச்சார்பாகவும் தத்தமது சுய அரசியல் சித்தாந்தங்களை உட்புகுத்தவும், ஒரு வகையான சர்வாதிகாரப் போக்குகளுக்குள் மக்களை உட்படுத்தி ஆட்சி செய்யும் கைங்கரியங்களையே மேற்கொண்டிருந்ததன் காரணமாக, மக்கள் அந்த அரசை எதிர்க்கத் தொடங்கியது மட்டுமல்லாது அது தொடர் மக்கள் எழுச்சிப் போராட்டங்களாக மாறி அரசாங்கத்தின் தலைவிதியை மாற்றிவிட்டது எனலாம்.

குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019இல் ஜனாதிபதி கதிரைக்கு வந்த பிறகு இந்த நாட்டின் அழிவுக்கான காலம் தொடங்கிவிட்டது எனலாம். இவரின் ஆட்சியிலேயே ஒருசில பௌத்த பிக்குகளை உள்ளடக்கிய இனவாத கும்பல் இந்த நாட்டில் பகிரங்கமாக நடமாடி சிறுபான்மை மக்களை நிம்மதியற்ற நிலைமைகளுக்கு ஆளாக்கிவிட்டனர். பெரும்பான்மை என்ற கர்வத்தினால் அரசியல் உயர்பீட அதிகாரங்களை வைத்துக்கொண்டும் அரசின் பாதுகாப்புத்துறையினர் பாதுகாப்புகளையும் பெற்றுக்கொண்டு இந்த நாட்டில் மக்களின் நிம்மதியை கெடுப்பதே அவர்களின் தலையாய கடமையாக இருந்தது. சிறுபான்மை மக்களுக்கு சமய ரீதியாக அவர்கள் செய்த அநியாயங்களும், கெடுதிகளும் வார்த்தைகளால் குறிப்பிட முடியாது. அந்தளவிற்கு சிறுபான்மை மக்களை இந்த நாட்டில் ஓரங்கட்டுவதற்கும், முஸ்லிம்களை சமய அனுஷ்டானங்களை செய்ய விடாது தடுத்து வந்ததுடன் இலங்கை வாழ் மக்களை அரபு நாடுகளுக்கு செல்லுமாறும், தமிழ் மக்களை பல வழிகளிலும் நசுக்கி இந்த நாட்டை விட்டு புலம்பெயர் நாடுகளுக்கு செல்வதற்குமான கடினமான துன்புறுத்தல்களை அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் உடல்களை எரியூட்டலாம் அல்லது மண்ணில் பாதுகாப்பான முறையில் புதைக்கலாம் என்ற அறிவித்தல்கள் வழங்கியிருந்ததுடன் அதிகமான நாடுகளில் அந்த உடல்களை புதைத்தே வந்தனர். எனினும், இலங்கையில் கோட்டாபய அரசும் அவருடன் ஒட்டியிருந்த நிபுணர்குழுவும், ஒருசில பௌத்த இனவாத தேரர்களும் இலங்கையில் கொரோனா நோயால் இறக்கும் உடல்களை கட்டாயம் எரியூட்ட வேண்டும் என்ற பிடிவாதத்துடன் முஸ்லிம் சமூகத்தின் கண்ணீருக்கும் கவலைகளுக்கும் மத்தியில் எரியூட்டினர்.

இந்த கைங்கரியத்திற்கு அரசாங்க சுற்று நிருபங்களையும், அரச வர்த்தமானி அறிவித்தல்களையும் தன்னிச்சையாக மேற்கொண்டு முஸ்லிம் மக்களின் சமய, சம்பிரதாய செயற்பாடுகளை கொச்சைப்படுத்தி அவர்களின் விருப்பங்களுக்கு முற்றிலும் மாற்றமாக அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் எரியூட்டிய சம்பவங்கள் இலங்கை மக்களை மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும் வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் வழிசமைத்ததுடன் அரசின் அந்த மூர்க்கத்தனமான செயற்பாடுகளை ஒருசில இனவாத சக்திகளும், இனவாத பௌத்த துறவிகளும் முண்டுகொடுத்தமையை யாராலும் மறக் முடியாது.

அதிகமான உடல்களை கொரோனா தொற்று என்ற போர்வையில் அவற்றை தனிமைப்படுத்தி உறவினர்களின் சமய அனுஷ்டானங்களுக்குகூட உரிய முறையில் சந்தர்ப்பம் வழங்காது பச்சிளம் பாலகன் முதல் வயோதிபர் வரை எரித்து தீர்த்தனர்.

இவ்வாறு கோட்டா அரசாங்கம் மக்களின் உடல், உள உணர்வுகளையும் கேலிக்கூத்தாக்கி வஞ்சித்து, தமது அரசியல் சதுரங்கத்தை மேற்கொண்டதன் வினை இன்று அவரை நாடோடியாக ஆக்கிவிட்டது எனலாம். அதாவது, அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்குமாம் என்பதற்கு ஒப்பாக, இன்று அவர்கள் செய்த வினைக்கு தண்டனை கிடைத்துவிட்டது. ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களின் பங்களிப்புடன் பல்கலைக்கழக மாணவர்கள், அரச, தனியார் துறை ஊழியர்கள், வர்த்தக சமூகத்தினர், விவசாயிகள், ஆசிரிய சமூகத்தினர், வைத்தியத்துறையினர், சமயத் தலைவர்கள், சட்டத்தரணிகள், அங்கவீனமுற்ற சகோதரர்கள் என சகலரும் குறிப்பாக கோட்டாபயவை வாக்களித்து ஆட்சிக்கு அமர்த்திய 69இலட்சம் மக்களுடன் ஒட்டுமொத்த இலங்கை வாழ் மற்றும் சர்வதேச வாழ்மக்களும் போராட்டக் களத்தில் துணிச்சலுடன் குதித்து இன்று மூன்று மதங்களைத்தாண்டி இன்றுவரை அரசுக்கு எதிரான போராட்டம் வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கின்றது எனலாம்.

இவ்வாறான மக்கள் எழுச்சிப்போக்கிற்கு காரணம், மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை இல்லாது செய்து நாட்டின் பல முக்கிய இடங்களை வெளிநாட்டவருக்கு தாரைவார்த்தமையின் பிரதிபலிப்புகள் மக்களை பொறுமையிழக்கச் செய்தது எனலாம். இவர்களின் அபகரிப்பு நிலைமைகளை கருத்திற்கொண்டு, சர்வதேச நாடுகள்கூட இலங்கைக்கு உதவுவதற்கு முன்வரவில்லை. இதன் காரணமாக நாடு அதளபாதாளத்திற்கு சென்றுள்ளதுடன், ஒவ்வொரு பொருட்களையும் அதிகப்படியான விலைகொடுத்து நீண்டவரிசைகளில் பல மணி நேரம் காத்திருந்து பெறுவதற்கும், தேவையற்ற விதத்தில் பொருட்களுக்காக வீதிகளில் அலைவதற்கும் வழி சமைத்ததுடன் இவ்வாறான வரிசைகளில் நின்றவர்கள் மாரடைப்பு போன்றவற்றால் இறப்பதற்கும் அவர்கள் வித்திட்டுவிட்டனர்.

எது எவ்வாறாகயிருந்தாலும், நாட்டை வீழ்ச்சிப்போக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற இளைஞர்களின் அறவழிப் போராட்டம் ஒட்டுமொத்த மக்களின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்பட்டதால் ராஜபக்ஷ குடும்பத்தை ஆட்சியிலிருந்து விரட்டியடிப்பதற்கு காரணமாக அமைந்தது எனலாம்.

ஒட்டுமொத்த மக்களின் எதிர்ப்புகளைக் கண்டு கௌரவமாக பதவி விலகியிருந்தால் பல உயிர்களை இழந்திருக்கத் தேவையில்லை. மாறாக, சண்டித்தனமாக ஆட்சியை கௌவிப்பிடித்துக் கொண்டதன் காரணமாக, மக்கள் ஆவேசப்பட்டு போராட்ட வழிமுறைகளை வீரியமாக்கி தொடராக எதிர்ப்புகளை மேற்கொண்டு மே 9, ஜூன்9, ஜூலை 9 என மூன்று ராஜபக்ஷக்களை பதவியைவிட்டு விலக்கி உலகில் எந்த ஒரு நாட்டிலும் இடம்பெறா வரலாற்றுச் சாதனையை இலங்கைவாழ் மக்கள் மேற்கொண்டனர். அதுதான் உயர்பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமர் மாளிகை, பிரதமர் அலுவலகங்களை மக்கள் முற்றுகை இட்டு தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையாகும்.

இந்த முற்றுகையின் பிரதிபலிப்பே இன்றைய அரசாங்கத்தின் ஆட்சி மாற்றத்திற்கான செயற்பாடாகும். இருந்தாலும் பூரணமான தமது கோரிக்கைகள் நிறைவேறும் வகையில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பான ஆர்ப்பாட்டமும் பிரமதர் மாளிகைக்கு முன்பான ஆர்ப்பாட்டமும் நிறைவுபெறாது என தெரிவித்து தொடர்ந்தும் தமது ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மக்கள் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவை நாட்டைவிட்டு துரத்தியடித்து இன்றும் நிம்மதியில்லாமல் மாலைதீவிலும் சிங்கப்பூரிலும் அவர் நாடோடியாக திரிய வைத்துள்ளது எனலாம்.

எனவே இங்கு நாம் தொகுத்து நோக்கும்போது, ஒரு ஜனநாயக நாட்டில் ஆட்சிக்கு வருபவர்கள் மக்களின் நலன்களை அடிப்படையாக வைத்து அவர்களின் துன்ப துயரங்களை போக்கும் வகையில் ஆட்சியை கொண்டு செல்ல வேண்டும். மாறாக, மக்களின் நலன்களுக்கு அப்பால் சுயநல அரசியலை வளர்த்தும், இனவாதத்தை தூண்டியும், பல்லின சமய, சமூக மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மை மக்களை ஓரங்கட்டி ஆட்சியை நடத்துவதும் மக்களின் பணங்களை கொள்ளையடித்தல், பொதுச் சொத்துகளை தம்வசப்படுத்திக் கொள்ளல், பொதுப்பணத்தைக் கொண்டு வெளிநாடுகளில் தமக்கான சொத்துகளை சேகரித்துக் கொள்ளுதல் என்பனவெல்லாம் இனிவரும் காலத்தில் இலங்கைவாழ் மக்களிடத்தில் செல்லாக்காசான விடயமாகவே அமையும் என்பதனை ‘அரகலய’ எனும் மக்கள் எழுச்சிப் போராட்டம் தடம்போட்டு காட்டி விட்டது எனலாம்.

**- சத்தார் எம்.ஜாவித் -**

## இன்றைய நாளில்...

- 1823 – யாழ்ப்பாணத்தில் பட்டிக்கோட்டா குருமடம் டானியேல் வாரன் புவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 – தனியே உலகைச் சுற்றி வந்த முதல் மனிதர் வைலி போஸ்ட் 7 நாட்கள், 18 மணி, 45 நிமிடங்களில் உலகைக் கடந்து நியூயோர்க்கை வந்தடைந்தார்.
- 1962 – நாசாவின் மரைனர் 1 விண்கலம் ஏவப்பட்டு சில நிமிடங்களில் கட்டுக்கடங்காமல் சென்றதால் அது அழிக்கப்பட்டது.
- 1983 – போலந்தில் இராணுவச் சட்டம் அதிகாரபூர்வமாகத் திரும்பப் பெறப்பட்டது.
- 1999 – விண்டோஸ் லைவ் மெசன்ஜர் மைக்ரோசொப்ட்டினால் வெளியிடப்பட்டது.
- 2003 – ஈராக்கில் சதாம் உசேனின் புதல்வர்கள் குவாசி, உதய் இருவரும் அமெரிக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சதாமின் 14வயதுப் பேரனும் கொல்லப்பட்டார்.
- 2009 – 21ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட சூரிய கிரகணம் நிகழ்ந்தது. வட இந்தியா, நேபாளம், வங்காள தேசம் போன்ற இடங்களில் முழு கிரகணம் ஏற்பட்டது.
- 2011 – நோர்வேயில் இரண்டு தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றன. மொத்தம் 77 பேர் கொல்லப்பட்டனர்.
- 2019 – இந்தியாவில் சந்திரயான்-2 விண்கலம் நிலாவை ஆய்வு செய்வதற்காக ஏவப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

நாட்டு மக்கள் செத்து மீண்டும் பிறந்திருக்கிறாங்கள் எண்டு நினைச்சுக்கொண்டுதான் வீரவங்ச பேசுறார்...









இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்க, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து நேற்று (21) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.







# சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த ஆறு இந்திய மீனவர்கள் கைது





மன்னாருக்கு வடபுறமான இலங்கை கடற்பரப்புக்குள் இலங்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது, சர்வதேச கடற்பரப்பை மீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இந்தியாவுக்கு சொந்தமான ட்ரோலர் படகொன்று நேற்று முன்தினம் (20) சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது, குறித்த படகிலிருந்து ஆறு இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு மீனவர்கள், உள்நாட்டு கடல் எல்லையை மீறி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைளில் ஈடுபடுவதால், தேசிய மீனவர் சமூகத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் சேதத்தை தவிர்ப்பதற்காக கடற்படையினர் தொடர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைய, வடக்கு கடற்படை கட்டளைப் பிரிவு அதிகாரிகளினால் மன்னாருக்கு வடக்கு திசையினூடான கடற்பரப்பில் முன்னெடுக்கப் பட்ட ரோந்து நடவடிக்கையின்போது, சர்வதேச கடற்பரப்பை மீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய ட்ரோலர் படகொன்று கைப்பற் றப்பட்டுள்ளதுடன், அந்தப் படகிலிருந்து 06 இந்திய மீனவர்கள் இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர். இதேவேளை, அந்தப் படகிலிருந்து மீன்பிடி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய ட்ரோலர் படகு, அதிலிருந்த மீன்பிடி உபகரணங்களுடன் இந்திய மீனவர்கள் ஆறு பேரும் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் மீன்பிடி பரிசோதனை காரியாலயத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, குறித்த ட்ரோலர் படகுடன் ஜூலை மாதத்தில் மாத்திரம், இலங்கைக்கு சொந்தமான கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 04 மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றிலிருந்த 29 இந்திய மீனவர்கள் மேலதிக சட்டநடவடிக்கைகளை முன்னெடுக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





**கடந்த பல ஆண்டுகளாக ஏழ்மையில் வாடும் தேவையுடைய மூவின மக்களுக்கும் பல்வேறுபட்ட உதவிகளை செய்துவரும் இளம் முஸ்லிம் மாதர் அமைப்பு, காது கேளாத ஒரு ஏழைப் பெண்மணிக்கு காதில் பொருத்தும் இயந்திரமொன்றை கனடியன் ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் அமைப்பின் உதவியுடன் பெற்றுக் கொடுத்துள்ளது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

# தனிப்பட்ட தகவல்களை திரட்டும் அங்கீகாரமற்ற இணையதளங்கள்

தேசிய எரிபொருள் அனுமதி (QR குறியீடு) பத்திரத்தை உத்தியோகபூர்வமான, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட (National Fuel Pass) http://fuelpass.gov.lk மூலம் மட்டுமே பெற முடியும் என்று தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த நிறவனம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தனிப்பட்ட தகவல்களை சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுளள அங்கீகரிக்கப்படாத இணையதளங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால் இது குறித்து பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள் கிறோம். இவ்வாறான இணையதளங்களினால் தனிப்பட்ட தகவல்கள் திருடப்பட்டு வெளி இடங்களுக்கு விற்பனை செய்யப்படலாம். இது பாரிய ஆபத்தான விடயமாகும். இவ்வாறான இணையதளங்கள் குறித்து கண்காணிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

# மொசாம்பிக் நிலையான எரிசக்தித் துறையிலான வாய்ப்புகள் குறித்த தொழில்நுட்பக் கூட்டம் நிறைவு

தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் மொசாம்பிக் வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து கடந்த 08ஆம் திகதி இரண்டாவது (தொழில்நுட்ப நிலை) கூட்டத்தை மொசாம்பிக் கனிம வளங்கள், எரிசக்தி அமைச்சு மற்றும் பூனே (எரிசக்தி நிதியம்) முகாமைத்துவ உறுப்பினர்கள், நிபுணர்கள் மற்றும் இலங்கையின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (நீர்மின்சக்தி, சூரிய மற்றும் காற்று) விநியோக நிறுவனங்களின் நிபுணர்கள் ஆகியோருக்கு இடையில் ஏற்பாடுசெய்தது.

இந்தச் சந்திப்பு 2022 மே 10ஆம் திகதி மொசாம்பிக் மற்றும் இலங்கை அமைப்புகளுக்கு இடையில் நடைபெற்ற முதலாவது முகாமைத்துவ மட்ட சந்திப்பின் தொடர்ச்சியாகும்.

2022இல் மொசாம்பிக்கில் இயற்றப்பட்ட புதிய மின்சாரச் சட்டத்தை விளக்கிய கனிம வளங்கள் மற்றும் எரிசக்தி அமைச்சின் பிரதி தேசியப் பணிப்பாளர் மார்சிலினா மாடவியா, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் கட்டற்ற ஆற்றல் வழங்கல் மீதான தனியார்துறை அணுகல் ஆகியவை தொடர்பிலான கவனத்தை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

தேவையான சட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், 2020-2024ஆம் ஆண்டுக்கான 600 மெகாவோட் மின்சாரத்தை உருவாக்கும் திட்டத்தைக் காட்டும் மொசாம்பிக்கில் நிலையான எரிசக்தி திட்ட வாய்ப்புகள் பற்றிய விளக்கக்காட்சியை வழங்கிய அவர், 200 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து கிடைக்கும் எனக் குறிப்பிட்டார். உலகளாவிய அணுகலுக்கான தேசிய இலக்கு, 60% கட்டம் மற்றும் 30% கட்டத்திற்கு அப்பாற்பட்ட அமைப்புகளின் மூலமாக அமையும்.

இலங்கைத் தரப்பிலிருந்து சிறிய நீர் மின்சக்தி சங்கத்தின் தலைவர் துசித பெரிஸ், காற்றாலை சக்தி சங்கத்தின் செயலாளர் மஞ்சுள பெரேரா, சூரியசக்தி சங்கத்தின் லசித் விமலசேன மற்றும் நிலையான எரிசக்தி அதிகாரசபையின் தலைவர் ரஞ்சித் சேபால ஆகியோர் விளக்கக்காட்சிகளை வழங்கினர். இலங்கையில் செயற்படும் நீர், காற்று மற்றும் சூரியசக்தி திட்டங்கள், ஏனைய ஆபிரிக்க நாடுகளில் (மலாவி, உகண்டா, சாம்பியா, சிம்பாப்வே, ருவாண்டா மற்றும் கென்யா) அமைக்கப்பட்டுள்ள திட்டங்கள், இலங்கை வசதிகள் மற்றும் மின்மாற்றி கட்டுமானத் துறைகளின் ஆதரவு குறித்த இந்த விளக்கக்காட்சிகள் கவனம் செலுத்தின. மொசாம்பிக் பங்கேற்பாளர்கள், பொறியியல் நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவுடன் மொசாம்பிக்கிற்கு வழங்கக்கூடிய இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விநியோக நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இலங்கை நிறுவனங்கள் மொசாம்பிக் தேசிய எரிசக்தித் திட்டம், வள வரைபடங்கள், எரிசக்தி விநியோக வலையமைப்பு, உள்ளூர் மற்றும் வெளி நிதிகள், நில இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கொள்கைகள், பல அனுமதிகளைப் பெறுவதற்கான ஒரே இடத்திலுள்ள வகை ஒருங்கிணைப்பு, ஏனைய வணிக நட்பு நடவடிக்கைகள், அமெரிக்க டொலருடன் இணைக்கப்பட்ட கட்டணக் கட்டமைப்புகள் மற்றும் இரட்டை வரிவிதிப்பு நிவாரணம் பற்றிய தகவல்களைக் கோரின. பதில்கள் மற்றும் விரிவான ஆதார வரைபடங்கள், வலையமைப்பு வரைபடங்கள் மற்றும் மேலதிக தகவல்களை வழங்கக்கூடிய ஏனைய அரச நிறுவனங்களுக்கான தொடர்புகளை கனிம வளங்கள் மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் ஃபுனே நிபுணர் குழு வழங்கியது.

இலங்கைக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க, மொசாம்பிக் நாட்டிலுள்ள முக்கிய அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களைச் சந்திப்பதற்காக இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனங்களின் வருகையை எளிதாக்கு வதற்கு மொசாம்பிக் தரப்பு ஒப்புக்கொண்டது.

இந்தக் கூட்டத்தொடரை ஒழுங்கமைப்பதில் கடுமையாக உழைத்தமைக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் இந்துமினி கொடிக்கார, ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் உதவிப் பணிப்பாளர் குமுதினி இருகல்பண்டார, தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் - வர்த்தகம், சஞ்சீவ பண்டார மற்றும் மொசாம்பிக் வர்த்தக சபை உறுப்பினர் ஹிப்போலிட்டோ ஹமேலா ஆகியோருக்கு பிரிட்டோரியாவிலுள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகர் பேராசிரியர் காமினி குணவர்தன நன்றி தெரிவித்தார்.

இலங்கை நிறுவனங்களுக்கு மொசாம்பிக்கில் உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்கும் முக்கிய தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக தரப்பினருக்கு வழிவகுத்த பங்கேற்பு மற்றும் தொழில்முறை விளக்கக்காட்சிகளுக்காக கனிம வளங்கள் மற்றும் எரிசக்தி அமைச்சு, ஃபுனே நிபுணர்கள் மற்றும் இலங்கை நிபுணர்களுக்கு அவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

மொசாம்பிக் கனிம வளங்கள் மற்றும் எரிசக்தி அமைச்சு, இலங்கை சிறு நீர்மின் சங்கம், இலங்கை காற்றாலை சக்தி சங்கம் மற்றும் இலங்கை சூரிய சங்கம் ஆகியவற்றால் செய்யப்பட்ட வீடியோ விளக்கக்காட்சிகள் கோரிக்கையின்பேரில், trade.pretoria@gmail.com இல் கிடைக்கின்றன.

# ரணில் ஜனாதிபதியானதையிட்டு யாழில் வெற்றிக்கொண்டாட்டம்





(யாழ். நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாண நகரில் வெடி கொளுத்தி வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதையடுத்து யாழ். நகரின் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசுகளை கொளுத்தி மகிழ்ச்சியை பரிமாறிக்கொண்டனர்.

இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற பதவிப்பிரமாண நிகழ்வில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# குருந்தூர்மலைக்கு நீதிபதி கண்காணிப்பு விஜயம்

## பொலிஸாருக்கு திருத்திய கட்டளை பிறப்பிப்பு



முல்லைத்தீவு, குருந்தூர்மலையிலுள்ள சைவ, தமிழ் பௌத்த தொல்லியல் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள சிங்கள பௌத்த கட்டுமானங்களை பார்வையிட்ட முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ஆர்.சரவணராஜா, புதிய கட்டுமானங்களை அகற்றும்போது தொல்லியல் சின்னங்களும் அகற்றப்பட வாய்ப்பிருப்பதால், புதிய கட்டடங்கள் அமைக்கப்படாமல் தற்போதுள்ளபடியே கட்டுமானங்களை பராமரிக்க வேண்டுமென்ற திருத்திய கட்டளையை வழங்கினார்.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் சைவ ஆலயம், தமிழ் பௌத்த தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான அங்கு, பௌத்த சிங்கள கட்டுமானங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

இராணுவம், பொலிஸ் பாதுகாப்புடன் தாதுகோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு பிரதேச மக்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்ததால், தற்போது கட்டுமானப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த கட்டுமானப் பணிக்கு எதிராக முல்லைத் தீவு நீதிமன்றத்தில் ஆலய நிர்வாகம்சார்பில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 14ஆம் திகதி இது தொடர்பான தீர்ப்பை வழங்கிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ஆர்.சரவணராஜா, சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டுமானங்களை அகற்றும் படியும், இது தொடர்பான அறிக்கையை ஜூலை 30ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில், முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து, குருந்தூர்மலைக்கு கண்காணிப்பு விஜயம் செய்த நீதவான், தொல்லியல் சின்னங்களின் மேல் புதிய சட்டவிரோத கட்டுமானங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதால், அவற்றை அகற்றும்போது, தொல்லியல் சின்னங்களும் பாதிக்கப்படலாம் என குறிப்பிட்டு, திருத்திய கட்டளையொன்றை பிறப்பித்தார்.

சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றாமல், ஜூன் மாதம் 12ஆம் திகதி இருந்ததைபோல் அந்தப் பகுதியை பராமரிக்கும்படி பொலிஸாருக்கு திருத்திய கட்டளையின் மூலம் உத்தரவிட்டார். அந்தப் பகுதியில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளை தொடர்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# தேசிய மாணவர் படையணியால் யாழில் இரத்த தானம்





(யாழ். நிருபர்)

தேசிய மாணவர் படையணியின் இருபதாவது படைப்பிரிவின் 11ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (20) இரத்ததான முகாம் ஒழுங்குசெய்யப்பட்டது.

யாழ். மாவட்ட தலைமை செயலகத்தில் கட்டளைத் தளபதி மேஜர் நிரோஷன் ரத்னவீர தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் 511ஆவது, 512ஆவது படைப்பிரிவு, 51ஆவது காலாட் படையணி ஆகியவற்றின் சிவில் ஒழுங்கமைப்பு அதிகாரிகள், படைப்பிரிவின் அதிகாரிகள், மாணவச் சிப்பாய்கள், நலன் பிரிவுகள், பழைய மாணவ சிப்பாய்கள் என 100 பேர் இரத்த தானம் செய்தனர்.

# மன்னாரில் விசேட கொடுப்பனவு வழங்கிவைப்பு





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான விசேட கொடுப்பனவு நேற்று வியாழக்கிழமை (21) மன்னார் மத்தி சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் தலைமையில் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலகத்தின் கீழ் சமுர்த்தி கொடுப்பனவு பெறாத அதே நேரம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களுக்கான இரண்டு மாத கொடுப்பனவான 10ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி திணைக்களம் இணைந்து மேற்படி செயற்திட்டத்தின் ஊடாக மன்னார் மத்தி சமுர்த்தி பிரிவில் சுமார் 936 குடும்பங்களுக்கான கொடுப்பனவை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின் போதைப்பொருளை ஊசிமூலம் எடுத்துக்கொண்ட இளைஞன் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

ஹெரோயின் போதைப்பொருளை ஊசி மூலம் எடுத்துக்கொண்ட 20 வயதுஇளைஞன் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் கொழும்புத் துறையில் கடந்த செவ்வாய்க்கிழமை (19) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நண்பர்களுடன் இணைந்து ஹெரோயின் போதைப்பொருளை ஊசிமூலம் செலுத்திய இளைஞன், சில நிமிடங்களில் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இளைஞனின் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பெறப்பட்ட சலம் மாதிரியில் போதைப் பொருள் நேர்மறை அறிக்கை கிடைத்துள்ளது.

இளைஞனின்சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் அண்மைய காலப்பகுதியில் போதைப்பொருள் பாவனையினால் தொடர்ச்சியாக உயிரிழப்புகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்ட கம்பனிகள் மக்கள் நலன்களுக்கு எதிராக செயற்பட்டால் நியாயத்துக்காக போராட வேண்டி ஏற்படும்

## மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கணபதி கனகராஜ்



(தலவாக்கலை நிருபர்)

பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டங்களை பொறுப்பேற்ற காலத்திலுள்ள நிலைமை தற்போது முழுமையாக மாற்றமடைந்துள்ளது. தோட்ட நிர்வாகங்களின் எல்லையற்ற அதிகாரங்களின் காரணமாக தோட்டங்களில் வாழுகின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும், தோட்ட நிர்வாகிகள் தமது அதிகார எல்லையை தேயிலை பயிரிடப்பட்ட நிலங்களுடன் நிறுத்திக்கொள்ளவேண்டும் எனவும் மாறாக, மக்கள் நலன்களுக்கு எதிராக செயற்பட்டால் பெருந்தோட்ட குடியிருப்பாளர்களை ஒன்று திரட்டி நியாயத்துக்காக போராட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது தோட்டங்களில் குடியிருப்பாளர்களாக வாழ்கின்றவர்களில் சுமார் 50வீதத்திற்கு மேற்பட்டவர்கள் தோட்டங்களில் வேலை செய்யாதவர்களாக இருக்கின்றனர். இவர்களின் நலன்கள் தொடர்பில் தோட்ட நிர்வாகங்கள் அக்கறை செலுத்துவதில்லை. தோட்டங்களில் வேலை செய்யாத தோட்ட குடியிருப்பாளர்கள் தமது வாழ்வாதாரங்களை கொண்டு நடத்துவதற்கு முற்படுகின்றபோது பல்வேறு இடையூறுகளை தோட்ட நிர்வாகங்கள் ஏற்படுத்துவதுடன், அதற்கு தடையாகவும் இருக்கின்றன.

தோட்டங்களில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தவர்கள் பலரை தற்போது தோட்டத்தில் வேலை செய்யவில்லை என்ற ஒரே காரணத்துக்காக ஒதுக்கி ஓரம் கட்டுவதற்கு பெருந்தோட்டப் கம்பனிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. மூன்று, நான்கு தலைமுறையாக பாவித்து வந்த தோட்டக் குடியிருப்புகள் மற்றும் அவர்களின் விவசாய நிலங்கள், கால்நடை வளர்ப்புக்காக பயன்படுத்தி வருகின்ற புட்தரைகள் என்பனவற்றில் அதிகாரம் செலுத்துவதையும், அவர்களை சட்டவிரோத குடியிருப்பாளர்கள் என்ற மனப்பான்மையுடன் நடத்தப்படுவதையும் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது.

பெருந்தோட்ட கம்பனிகளுக்கு தோட்டக் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும், ஆனால் தோட்டங்களில் குடியிருப்பாளர்களாக வாழ்பவர்கள் பெருந்தோட்டங்களை உருவாக்கி இன்று வரை அதில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் தோட்டக் கம்பனிகள் மனதில் கொள்ள வேண்டும்.

பெருந்தோட்டங்களில் வேலை செய்பவர்கள் தொடர்ச்சியாக அதிலேயே வேலை செய்ய வேண்டும் என்று எவரும் எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் படித்தவர்களாகவும் பல்வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும் மாறி வருகின்றனர். இவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. இவற்றை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது எமது கடமையாகக் கருதுகிறோம்.

தோட்டங்களில் வேலை செய்யாதவர்களின் குடியிருப்பு, விவசாய நிலங்கள், புட்தரைகள் என்பனவற்றில் தேவையற்ற தலையீடுகள் செய்வதிலிருந்து பெருந்தோட்ட கம்பனிகள் விலகிக்கொள்ள வேண்டும். அத்துடன் பெருந்தோட்ட கம்பனிகள் தேயிலை காணிகளுடன் தமது அதிகார எல்லையை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். மாறாக, மக்கள் நலன்களுக்கு எதிராக செயற்பட்டால் பெருந்தோட்ட குடியிருப்பாளர்களை ஒன்று திரட்டி நியாயத்துக்காக போராட வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.





இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவானதையடுத்து கம்பளை கீரப்பனை பிரதேசத்தில் நகர சபைத் தவிசாளர் சமந்த அருணகுமாரவின் தலைமையில் அவரது ஆதரவாளர்கள் பட்டாசுகொளுத்தி தமது சந்தோஷத்தை வெளிப்படுத்தினர். (கம்பளை யோகா)

# குளத்தில் நீராடச்சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு



நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள குளத்தில், நீராடச் சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம்(20) பகல் குறித்த மாணவர்கள் இருவரும் யாருக்கும் தெரியாமல் நீராடச்சென்று, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் இதனை அவதானித்த பிரதேசவாசி ஒருவர், பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, அவர்களின் சடலம் மீட்கப்பட்டு பேராதனை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் யாலதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதான சுப்ரமணியம் விஸ்வா, மொஹமட் அபராத் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# எட்டியாந்தோட்டை பிரதேசங்களில் வீட்டு செல்லப்பிராணிகளை உணவுக்காக இழுத்துச்செல்லும் சிறுத்தைப்புலிகள்

எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல இடங்களில் உள்ள வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் காணாமல் போவதாக பிரதேசவாசிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கில்ம, பெரன்னாவ, அமனாவல, வேவல்தலாவ ஆகிய பகுதிகளில் உள்ள தமது வீட்டு செல்லப்பிராணிகளான நாய், பூனை ஆகியன திடீரென்று காணாமல்போகின்றன. கடந்த சில வருடங்களாக குறித்த பிரதேசத்தில் சிறுத்தைப்புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் கூடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் கூட சிறுத்தைப்புலிகளால் கூடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்படுவதாகவும் பிரதேசவாசிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் சீபொத், தெனவக்க தோட்டத்தில் இரண்டு சிறுத்தைப்புலிகள் வலையில் சிக்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்திலுள்ள அம்பான மற்றும் நாரங்கல ஆகிய வனப்பிரதேசங்களிலுள்ள சிறுத்தைப்புலிகள் உணவைத்தேடி மக்களின் வாழ்விடங்களை நோக்கிவருகின்றன. கடந்த இரண்டு வருடங்களுக்கு பிறகு, மீண்டும் இவ்வாறு செல்லப்பிராணிகள் காணாமல்போகும் சம்பவங்கள் நிகழ்கின்றன. எனவே, பொதுமக்கள் தமது செல்லப்பிராணிகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுமாறும் புளத்கொஹுபிட்டிய வனஜீவராசிகள் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

# திறன் வகுப்பறை கையளிக்கும் நிகழ்வு









(பி.கேதீஷ்)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட காரலிபேக் தமிழ் வித்தியாலய பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையொன்றை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம்(20) வன்னி ஹோப் நிறுவனத் தலைவர் ரஞ்சன் சிவஞான சுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

லக்ஸ்மன ஐயர் சசிதரன் குடும்பம் மற்றும் ஐக்கிய இராஜ்யத்தில் இயங்கும் இரட்ணம் பவுன்டேஷன் ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரணையில் வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை ஊடாக இவ் திறன் வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான ரஞ்சன் சிவஞானசுந்தரம், வைத்தியர் மாலதி வரன், நுவரெலியா கல்வி வலய மேலதிக பணிப்பாளர் மோகன்ராஜ், பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் என்.முரளிதரன், பாடசாலை அதிபர் சவரிமுத்து, நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி பணிப்பாளர் செல்வராஜ், கோட்டக் கல்வி பணிப்பாளர் கிருபாகரன், உதவி கல்விப் பணிப்பாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் கொழும்பு மாவட்டத்தில் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு மாநகர சபை தடுப்பூசி நிலையங்களிலிருந்து 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொவிட் - 19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியுமென கொழும்பு பிராந்திய தொற்று நோய் நிபுணர் வைத்தியர் டினு குருகே நேற்று (21) தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியைப் பெறத் தகுதியுடையவர்கள் 20 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனவும், கடைசி கொவிட் தடுப்பூசி பெற்று மூன்று மாதங்கள் முடிந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பொதுமக்கள் தங்களின் முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது பைசர் கொவிட் தடுப்பூசியினை



பெறுவதற்கு ஜிந்துபிட்டியிலுள்ள சுகாதார அதிகாரிகள் காரியாலயம், டன்ஸ் வீதியிலுள்ள சுகாதார அதிகாரிகள் காரியாலயம், நியூ பஜார் மகப்பேறு இல்லம், வெள்ளவத்தையிலுள்ள சுகாதார அதிகாரிகள் காரியாலயம், கம்பெல் பார்க் மற்றும் கிருல வீதியிலுள்ள சுகாதார அதிகாரிகள் காரியாலயம் ஆகிய இடங்களுக்குச் செல்லுமாறு மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் நேற்றுக் காலை 9 மணிமுதல் நண்பகல் 1 மணிவரை 19 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், நான்காவது டோஸ் 20 முதல் 60 வயதுக் குட்பட்டவர்களுக்கும், நோயெதிர்ப்புக் குறைபாடு மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்களுக்கும் தடுப்பூசியினை வழங்க பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# எரிவாயு வரிசையில் காத்திருந்தவரின் தலையில் தேங்காய் விழுந்து

## ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்ப்பு

காலி, பிட்டிகலவில் எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் மீது தேங்காய் விழுந்ததில் படுகாயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிட்டிகல, இதிபலேகொடவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரே இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

பிட்டிகலவில், இதிபலேகொட பாடசாலை மைதானத்தில் கடந்த ஐந்து நாட்களாக மக்கள் எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்துள்ளனர். அந்த வரிசையில் காத்திருந்த ஒருவர் மீதே நீண்டு வளர்ந்த தென்னை மரத்திலிருந்து தேங்காய் விழுந்துள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள அந்த நபரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# எம்பிலிப்பிட்டிய கோட்டா கோ கம மீது அடையாளந்தெரியாதோர் தாக்குதல்



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

எம்பிலிப்பிட்டிய கோட்டா கோ கம மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக எம்பிலிபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்

இரவுநேரமாகையால் இவ்விடத்தில் எவரும் தங்கியிருக்கவில்லை எனவும் ஆனால், தாக்குதல் நடத்தப்பட்டவர்களால் இங்கு அமைக்கப் பட்டிருந்த கூடாரங்கள், தற்காலிக இருப்பிடங்கள் பல உடைத்து நொறுக் கப்பட்டுள்ளன.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கமவுக்கு ஆதரவாக சுமார் மூன்று மாதங்களுக்கு முன் இந்த கோட்டா கோ கம அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து எம்பிலிபிட்டிய பொலிஸார் விசாரணைகளை நட த்தி வருகின்றனர்

# விவசாய பாரம்பரிய அமைப்புகள் குறித்த மாநாடு









சீனாவின் சிஜியாங்கிலுள்ள கிண்டியனில் உலகளவில் முக்கியமான விவசாய பாரம்பரிய அமைப்புகளுக்கான மாநாடு கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது. கலப்பின முறையில் நடைபெற்ற இந்த மாநாடு, அமைச்சர்கள் உட்பட உயர்மட்ட பேச்சாளர்களை ஈர்த்தது.

தூதுவர் கலாநிதி பாலித கொஹொன கூட்டத்தில் உரையாற்றியதுடன், விவசாய பாரம்பரிய அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பட்டியலிடப்பட்டுள்ள இலங்கையின் உலர் வலயத்தின் (கணிசமான அளவில் இன்னும் பயன்பாட்டில் உள்ளது) அடுக்கடுக்கான தொட்டி நீர்ப்பாசன முறைமையில் முக்கியமாக கவனம் செலுத்தினார். உலகளவில் பட்டியலிடப்பட்ட 65 உணவு மற்றும் விவசாய அமைப்புகளில் 18 சீனாவில் உள்ளன.

பங்கேற்பாளர்கள் பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூல் நூற்பு மற்றும் ஹூசோவில் இணைக்கப்பட்ட மீன் குளம் அமைப்பு மற்றும் நெல் சாகுபடி மற்றும் லாங் சியாங் கிராமத்தில் நெருக்கமாக தொடர்புடைய கெண்டை வளர்ப்பு முறை ஆகியவற்றின் சுற்றுப்பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். உட்கொள்ளக்கூடிய நான்கு வகையான கெண்டை மீன்களை கிராம மக்கள் வளர்த்து வந்தனர். ஒருங்கிணைந்த வேளாண்மை முறை இரசாயனங்களின் பயன்பாட்டைக் குறைக்க உதவுகின்றது.

# துளிச் செய்திகள்

பலப்பிட்டியவில் முச்சக்கரவண்டியொன்றில் சென்று வர்த்தக நிலையமொன்றில் இருந்த வெற்று எரிவாயு சிலிண்டரை பலாத்காரமாக எடுத்துச்சென்ற ஓய்வுபெற்ற கடற்படை வீரர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

★★★★★

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களனிகமவில் பொலிஸார் நேற்றுமுன்தினம் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது 21 கிராம் 560 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 26 வயதுடைய நபர் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

★★★★★

கிராண்ட்பாஸ், ஸ்ரீ சத்தர்ம மாவத்தையில் 10 கிராம் 395 கிராம் ஹெரோயின் வைத்திருந்த பெண்ணொருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். இந்தப் பெண் மாளிகாவத்தையைச் சேர்ந்த 58 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

★★★★★

மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாஹேனவில் 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★

வத்தளை, குடகஹபிட்டியவில் பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 30 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★

மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்ட கொஸ்கஹஹேனவில் 05 மில்லிகிராம் ஹெரோயினுடன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவரின் வீட்டை சோதனையிட்ட பொலிஸார், கொள்ளையிட்டதாகக் கூறப்படும் பல்வேறு பொருட்களை மீட்டுள்ளனர். அவற்றில் டெனிம் காற்சட்டை 606, இரண்டு ரயர்கள், கொள்ளையிட்ட ஆடைகளை விற்பனை செய்து பெறப்பட்ட வருமானத் தொகையான ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 850 ரூபா பணம் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

இரத்தினபுரி நகர எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரத்தினபுரியைச் சேர்ந்த 23, 52 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் கெரவலபிட்டிய பகுதியில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த இரும்பு வேலியை வெட்டி திருடிச்சென்றுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. அதன் பெறுமதி ஆறு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா எனத் தெரிவித்த பொலிஸார் சந்தேக நபர்களைத் தேடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய தயாராக வைத்திருந்த ஒருதொகை கழிவுத் தேயிலை மீட்பு





சிலோன் ரீ என்ற பெயரில் சர்வதேச சந்தைக்கு விற்பனை செய்வதற்கு தயார்படுத்தி வைக்கப்பட்டிருந்த கழிவுத் தேயிலை தொகையுடன் நபரொருவர் மோதரை, எலிஹவுஸ் வீதியிலுள்ள களஞ்சியத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

19,072.86 கிலோ கழிவுத் தேயிலை மற்றும் கழிவுத் தேயிலைக்கு நிறம் பூசுவதற்காக பயன்படுத்தப்படும் 336 லீற்றா திரவம் என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த கழிவுத் தேயிலைத் தொகை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமை அடையாளங்காணப்பட்டுள்ளதாகவும், சிலோன் ரீ என்ற பெயரில் சர்வதேச சந்தைக்கு விநியோகிக்கப்படும் இந்த கழிவுத் தேயிலை தொகையினால் இலங்கை தேயிலை விற்பனை சர்வதேசத்தில் பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்று வயது குழந்தையுடன் கிணற்றில் பாய்ந்த தாய்

## விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்தது நீதிமன்றம்

எல்பிட்டிய பகுதியில் தனது மூன்று வயது குழந்தையுடன் கிணற்றில் பாய்ந்து தற்கொலைக்கு முயற்சித்த தாயொருவரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குழந்தையின் தாயாரது மனநிலை குறித்து பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு எல்பிட்டிய நீதவான் நீதிமன்ற நீதவான் சமீர தொடங்கொட பணிப்புரை விடுத்துள்ளார்.

கரந்தெனிய, யக்கலுவவத்தையைச் சேர்ந்த 38 வயதான பெண்ணொருவருக்கே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தாய், கடந்த வாரம் தனது குழந்தையுடன் கிணற்றில் பாய்ந்துள்ளார். அந்த சத்தம் கேட்டு அருகிலிருந்த பாடசாலை மாணவர்கள் இருவர் துரிதமாக செயற்பட்டு குழந்தையையும் தாயாரையும் காப்பாற்றியுள்ளனர்.

கரந்தெனிய பந்துல சேனாதீர மகா வித்தியாலயத்தில் பத்தாம் தரத்தில் பயிலும் இரு மாணவர்களே இவ்வாறு தாயையும் குழந்தையையும் காப்பாற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் தாயார் மனநிலை பாதிக்கப்பட்டவரெனவும் அவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருபவரெனவும் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

# கொவிட் தொற்று காலப்பகுதியில் கடன்பெற்ற நிறுவனங்களுக்கு சலுகை

## உரிமம் பெற்ற வங்கிகளிடம் இலங்கை மத்திய வங்கி கோரிக்கை





நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு ஆறு மாதங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குமாறு உரிமம் பெற்ற வங்கிகளிடம் இலங்கை மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, அந்தந்த நபர்களின் எதிர்கால கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் வணிகம் அல்லது திட்டங்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

தற்போதுள்ள பெரும் பொருளாதார சவால்கள் மற்றும் மேலதிக நிவாரணம் வழங்குமாறு அரச நிறுவனங்கள் உட்பட பல தரப்பினர்களின் கோரிக்கைகளை கருத்திற்கொண்டு மத்திய வங்கி இந்த முடிவை எடுத்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலுடன் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு உதவுமுகமாக 2020 மாச்சு தொடக்கம் இலங்கை மத்திய வங்கி பல சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

சட்டஇசைவு தாமதகாலம், கடன் மறுசீரமைப்பு/மீள் அட்டவணைப்படுத்தல், கடன் அறவீட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்துதல், குறைந்த செலவில் மூலதனக் கடன்கள், சில வங்கித்தொழில் கொடுக்கல் வாங்கல்களுக்காக கட்டணங்கள் மற்றும் அறவீடுகளைத் தள்ளுபடி செய்தல் போன்றவற்றை இச்சலுகைகள் உள்ளடக்குகின்றன.

தனியார்துறை ஊழியர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அத்துடன் சுற்றுலாத்துறை, போக்குவரத்து, தயாரித்தல், சேவைகள், கமத்தொழில், நிர்மாணம், ஆடை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட ஏற்பாட்டுச்சேவை வழங்குதல் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஏனைய வியாபாரங்கள் உள்ளடங்கலாக தனிப்பட்டவர்களுக்கு இச்சலுகைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட சட்ட இசைவு தாமத காலத்தின் இறுதிக்கட்டம் 2021.12.31 அன்று முடிவடைந்தது.

அதேவேளை, சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட கடன் சலுகைக் காலத்தின் இறுதிக்கட்டம் 2022.06.31அன்று முடிவுற்றது. அதேவேளை, தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கக்கூடிய சாத்தியப்பாட்டைக்கொண்ட வணிகங்களுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்குடன், கொவிட்-19 நோய்த்தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட குறை செயற்றிறன் மற்றும் செயற்படா கடன்பெறுநர்களை அடையாளங்காணவும் உதவுமென இலங்கை மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19இற்குப் பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை நிறுவுமாறு அறிவுறுத்தியுள்ளதுடன், இதன்மூலம், கடன் சலுகைக் காலப்பகுதியை நிலைபேறான விதத்தில் நிறைவுசெய்ய வசதியளிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொல்கஹவெலவில் வயதான பெண்ணொருவரை கொலைசெய்து நகை, பணம் கொள்ளை

பொல்கஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தமுனுபொல பகுதி வீடொன்றில் தனிமையில் இருந்த வயதான பெண்ணொருவரை கொலை செய்து நகை, பணம் ஆகியன கொள்ளையிடப்பட்டுள்ளன. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் 73 வயதான பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

அன்றைய தினம் மாலைவேளையில் தொழிலுக்குச் சென்று வீடு திரும்பிய அந்தப் பெண்ணின் மகள், தாயார் இறந்து காணப்படுவது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

அந்தப் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலி, தோடு, 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணினி, 15 ஆயிரம் ரூபா பணம் ஆகியன கொலையாளிகளால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

அந்தப் பெண் அணிந்திருந்த தோடுகளை அகற்றுவதற்காக காதுகளை கூரிய ஆயுதத்தால் கீறியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த பெண்ணின் சடலம் மரண பரிசோதனைகளுக்காக குருநாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

இதேவேளை, இந்தக் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை அடையாளங் கண்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், அந்த நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.


திகதி 20.07.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4822
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,323,250.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 1 2 5 6 0 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,733,610.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1300
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,439,480.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 8 2 0 9 7 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,410,390.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3064
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,285,940.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 49 51 61 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,564,291.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 852
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,955,440.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 23 28 46 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,458,444.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 131
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,628,840.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 04 13 35 40 விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,251,555.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1170
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,493,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,509,382.00
T 07 28 40 47 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# ரணில் ஜனாதிபதியாக பதவியேற்ற நிலையில் மட்டக்களப்பில் குளிர்பானம் வழங்கி, பட்டாசு கொளுத்தி கொண்டாட்டம்








(வெல்லாவெளி நிருபர்)

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வமாக கடமையை சுபவேளையில் பொறுப்பேற்ற நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளர் மற்றும் முகாமையாளர் தலைமையிலான குழுவினர் குளிர்பானம் வழங்கி மகிழ்ச்சிக் களிப்பில் ஈடுபட்டனர்.

இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வமாக கடமையை நேற்று சுபவேளையில் பொறுப்பேற்ற நிகழ்வை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வீ.கே.லிங்கராசா மற்றும் கட்சியின் மாவட்ட முகாமையாளர் எல்.பிரதாப் தலைமையிலான குழுவினர் மட்டக்களப்பு நகரில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டார்கள்.

ஆரையம்பதி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.மகேந்திரலிங்கம், மட்டக்களப்பு மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான ரீ.சிவலிங்கம், பீ.சுரேஸ்குமார் ஆகியோர் குறித்த மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் அமைப்பாளரும், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமான திருமதி சசிகலா விஜயதேவா தலைமையில் தனது இல்லத்தில் பதாகை தொங்கவிட்டு வீதியில் பயணிக்கும் பொதுமக்களுக்கு குளிர்பானம் வழங்கி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பதவியேற்பை மகிழ்ச்சியாக கொண்டாடினார்கள்.

இதேவேளை, மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்னாள் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதியேற்றதையடுத்து கட்சி ஆதரவாளர்கள் நேற்று (21) பட்டாசு கொளுத்தி கொண்டாடினர்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இன்று 8ஆவது ஜனாதிபதியாக பதிவியேற்றதையடுத்து மட்டக்களப்பு ஐக்கிய தேசியக் கட்சி முகாமையாளர் ரி.லிங்கேஸ்வரன் தலைமையிலான கட்சி ஆதரவாளர்கள் ஒன்றுகூடியவர்கள் காந்தி பூங்காவிற்கு முன்னாள் தேசிய கொடியை கட்டி நகர் மணிக்கூட்டு கோபுரத்தின் முன்னால் பட்டாசு கொளுத்திக் கொண்டாடினர்.

# திருடர்களை பாதுகாக்கவே புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

நாட்டு மக்கள் போராட்டங்களை நடத்தி, பேரணிகளில் சென்று அதிகாரத்தில் இருக்கும் திருடர்களை வீட்டுக்கு அனுப்ப முயற்சித்தனர். எனினும், அந்தத் திருடர்கள் இணைந்து தமது பாதுகாப்புக்காக ஜனாதிபதி ஒருவரை நாடாளுமன்றத்தினூடாக தெரிவுசெய்துள்ளனர் - என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாட்டுக்கான புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார். முதலில் அவருக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டை மீட்டெடுக்க அவருக்கு பலம் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

நாடாளுமன்றத்தில் மக்களின் நிலைப்பாடுகள் பிரதிபலிக்கவில்லை. திருடர்களின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன், நாடாளுமன்றத்தில் நேற்று நாட்டு மக்களின் நிலைப்பாடுகள் பிரதிபலித்ததா என்று கேட்க விரும்புகிறேன். 2020 ஆம் ஆண்டு தேர்தலின் போது இருந்த சூழ்நிலைமைக்கேற்ப தெரிவு செய்யப்பட்டவர்களே தற்போது நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர்.

அன்று மக்களுக்கு இருந்த நிலைப்பாட்டுக்கு அமைய போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள். மக்களின் அந்த நிலைப்பாட்டில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனால், நாடாளுமன்றத்தில் மக்களின் தற்போதைய நிலைப்பாடுகள் பிரதிபலிக்கவில்லை. திருடர்களை விரட்டவே மக்கள் போராட்டங்களை நடத்தினர். திருடர்களின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.நாட்டு மக்கள் அன்று தமது நிலைப்பாடுகளுக்கு அமைய தெரிவான ஜனாதிபதியை நாட்டிலிருந்து விரட்டியுள்ளனர்.

அந்த ஜனாதிபதியுடன் தெரிவானவர்களே நாடாளுமன்றத்தில் அதிகளவில் இருக்கின்றனர். திருடர்களை விரட்டவே மக்கள் போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தினர். ஆனால், திருடர்கள் இணைந்து ஒருவரை தெரிவுசெய்துள்ளனர். நாட்டு மக்கள் தூய்மையான அரசியலை எதிர்பார்த்தனர்.

சஜித் மற்றும் டலஸ் ஆகியோரின் கறை படியாத கரங்கள், திருடர்களின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதன் காரணமாகவே கறை படியாத கரங்களைக் கொண்டுள்ள சஜித் பிரேமதாசவும் டலஸ் அலகப்பெருமவும் இணைந்து ஒரு பயணத்தை செல்ல தயாராகினர்.

எமது கட்சி இதற்காக ஐந்து சதத்தைக்கூட செலவிடவில்லை. மக்களின் நிலைப்பாட்டுக்கு அமைய செயற்படும் ஜனாதிபதியே எமக்கு வேண்டும். நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்டெடுப்பதா? நாட்டில் ஜனநாயகத்தை ஸ்தாபிக்கவா? இல்லை, எரிந்துபோன தமது சொத்துகளை நிர்மாணித்துக்கொள்ளவே வாக்களித்துள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. தமது பாதுகாப்பு, தமது வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வது மற்றும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் சர்வதேச ஆய்வு மாநாடு










யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினால் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் 'விஞ்ஞானம்' சர்வதேச ஆய்வு மாநாடு இம்முறை நோர்வே நாட்டின் மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானப் பல்ககலைக்கழகத்தின் பங்களிப்புடன் "புதிய இயல்பு நிலையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை முன்னிறுத்தல்'' எனும் தொனிப்பொருளில் நேற்று (21) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகள் (Jaffna University International Research Conference – JUICE 2022) வரிசையில் இடம்பெற்ற இம் மாநாட்டில் நோர்வே, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியாவின் பிரபல்யமான பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானப் பேராசிரியர்கள் கருத்துரைகளை வழங்கினர். உயிரியல் விஞ்ஞானம், இரசாயன - பௌதீக விஞ்ஞானம், கணினி - தகவல் தொழில்நுட்பம், சக்தி - சூழலியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கணிதம் - புள்ளிவிபரவியல், விஞ்ஞானக்கல்வி எனும் உபதலைப்புகளில் சர்வதேச மற்றும் இலங்கை ஆராச்சியாளர்களால் 43 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இம் மாநாட்டுக்கு நோர்வே நாட்டின் இலங்கைத் தூதரகம், நோர்வேயின் திறன் மற்றும் உயர் கல்விக்கான பணிப்பாளர் அலுவலகம் என்பன நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளன.

இந்த நிகழ்வில், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திறங்கொண்டு நிகழ்வுகள், இணைய வழியிலும் நேரலையாகவும் இடம்பெற்றன.

# கொழும்பின் சில இடங்களுக்கு 7 மணித்தியால நீர்வெட்டு

அத்தியாவசிய திருத்தப்பணிகள் காரணமாக எதிர்வரும் சனிக்கிழமை (23) கொழும்பின் சில பகுதிகளுக்கு 7 மணித்தியால நீர் விநியோகத் தடை மேற்கொள்ளப்படவுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு 7, 8, 9 மற்றும் 10 ஆகிய பகுதிகளுக்கு இரவு 11 மணிமுதல் காலை 6 மணிவரை நீர்விநியோகத் தடை மேற்கொள்ளப்படவுள்ளது.

# களுதாவளை பிரதேச சபையின் உப தவிசாளராக மன்ற பிரதிநிதிகளால் உறுப்பினர் வினோராஜ் தெரிவு

(வெல்லாவெளி நிருபர்)



மண்முனை தென்எருவில்பற்று களுதாவளை பிரதேச சபையின் உப தவிசாளராக பட்டிருப்புத் தொகுதியில் சமூக சேவையாளராக மக்கள் மத்தியில் கடமையாற்றிக் கொண்டிருப்பவரும், குறித்த பிரதேச சபையின் உறுப்பினருமான மேகசுந்தரம்-வினோராஜ் நேற்று (21) உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினால் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

களுதாவளை பிரதேச சபையின் உபதவிசாளராக கடமையாற்றிய திருமதி ரஞ்சினி கனகராஜா கடந்த ஒருமாத காலமாக ஐரோப்பிய நாட்டுக்கு சென்றுள்ளமையால் குறித்த உப தவிசாளர் வெற்றிடம் ஒரு மாதகாலமாக காணப்பட்டது.

இந்நிலையில், பிரதேச சபையின் உறுப்பினர்களால் பிரதேச சபை உறுப்பினர் மேகசுந்தரம் வினோராஜ் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் முருகப்பன் தேவதாசனால் முன்மொழியப்பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் கனகசபை ஸ்ரீகந்தராசாவினால் வழிமொழியப்பட்டார்.

# ஜே.வி.பியினர் போராட்டக்காரர்களை தூண்டிவிடாது ரணில் விடயத்தில் நிதானமாக செயற்பட வேண்டும்

## முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்

(கிண்ணியா நிருபர்)

ஜே.வி.பியினர் ஆறுமுறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளார்கள். ஐந்து இலட்சம் வாக்குகளைக்கூட பெறமுடியாத நிலையில், உள்ளவர்கள் போராட்டக்காரர்களை தூண்டிவிடாமல் இந்த விடயத்தில் நிதானப் போக்குடன் செயற்பட வேண்டும் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் அவரது இல்லத்தில் நேற்று (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கோட்டாபயவின் பதவி விலகலின்பின் இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவாகிய பின் அவர் மறுநாள் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் 57 நாடுகளின் தூதுவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி உதவிகளை நீண்டகால அடிப்படையில் பெறுவது தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளார். இவ்வாறாக சிறந்தொரு



தலைமைத்துவமாக சர்வதேசமும் இவரை ஏற்றுள்ளது. இதுபோன்று நாடாளுமன்ற ஜனாதிபதி தெரிவின்பின் அவர் சஜித், மஹிந்த, மைத்ரி போன்றவர்களிடமும் இணைந்து செயற்படுமாறும் கோரிக்கை விடுத்திருப்பது நாட்டைக் கட்டியெழுப்ப சிறந்த நிலையாக உள்ளது. 113 ஆசனங்களைப் பெறவேண்டிய ரணில், 134 ஆசனங்களை தனிமனிதனாக நின்று பெற்று இடைக்கால ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

சிறுபான்மை சமூகத்தை அசிங்கப்படுத்த நினைத்தபோது பெரும்பான்மை சமூகம் சிறுபான்மையினரை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய நிலை தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று இனவாதத்தைக் கைவிட்டு பெசில், கோட்டா, மஹிந்த போன்றவர்களும் ஐக்கிய இலங்கையை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஜே.வி.பியினர் ஆறுமுறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளார்கள். ஐந்து இலட்சம் வாக்குகளைக்கூட பெறமுடியாத நிலையில் உள்ளவர்கள் போராட்டக்காரர்களை தூண்டிவிடாமல் இந்த விடயத்தில் நிதானப் போக்குடன் செயற்பட வேண்டும்.

கோட்டா கோ ஹோம் போராட்டக்காரர்கள் ரணிலுக்கு ஒரு சந்தர்ப்பத்தை குறைந்தபட்சம் ஆறு மாத காலமாவது வழங்கிப் பார்க்கவேண்டும். மக்களை முடிச்சுப்போட்டு செல்லும் நிலையில் இருந்தால் மக்களும் நாடாளுமன்றமும் பதவி இழக்கச் செய்யவேண்டும். தற்போதைய நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் மற்றும் முன்னாள்ல் ஜனாதிபதிகளான மஹிந்த, மைத்ரி போன்றவர்களும் நாட்டைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்புகளை ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கவேண்டும் - எனவும் மேலும் தெரிவித்தார்.

# மட்டு. ஷேன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா!















(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு ஷேன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா முன்பள்ளியின் அதிபர் திருமதி டிலினி ஜேசுசாந்தி குசாந்தின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலய முன்பிள்ளைப் பருவ பராமரிப்பு, அபிவிருத்திக்கும் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் முத்துராஜா புவிராஜாவும், விசேட அதிதிகளாக மண்முனை வடக்குப் பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருச்செல்வம் மேகராஜா மற்றும் அருட்சகோதரி அனுஷியா பிரான்ஸிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முதல் நிகழ்வாக பிள்ளைகளினால் அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு, மலர்கொத்துகளும் வழங்கப்பட்டு, வரவேற்கப்பட்டனர். இறை வணக்கம், மங்கல விளக்கேற்றல் ஆகிய சம்பிரதாய நிகழ்வுகளும் இடம்பெற்றன. பின்னர் அதிதிகளினால் தேசியக் கொடி, பாடசாலைக் கொடி என்பன ஏற்றப்பட்டதுடன், தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. பிள்ளைகளினால் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டதுடன், அவர்களின் ஆற்றல்கள் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பல்வேறுபட்ட மகிழ்ச்சிகரமான விளையாட்டுகளும் இடம்பெற்றன.

விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட அனைத்துப் பிள்ளைகளுக்கும் சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டு, அவர்கள் அதிதிகளினால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி ராம் 6 வருடங்களுக்குப் பின்னர் விடுதலை

(கனகராசா சரவணன்)

கடந்த 2009ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வு பெற்று விடுதலைசெய்யப் பட்டிருந்த முன்னாள் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி ராம் மீண்டும் 2015ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு - சிறையில் அடைக்கப்பட்டு நேற்று முன்தினம் (20) 6 வருடகால சிறைத்தண்டனை நிறைவுற்ற நிலையில், மட்டக்களப்பு உயர் நீதிமன்ற நீதிபதியால் விடுதலைசெய்யப்பட்டார்.

முன்னாள் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதியாக செயற்பட்டிருந்த ராம், கடந்த 2009 மே 19 யுத்தம் மௌனித்த பின்னர் திருகோணமலையில் வைத்து கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதையடுத்து, இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்பின் கீழ் அவர் அம்பாறை தம்பிலுவில் பிரதேசத்தில் குடியேறி வாழ்வாதாரமாக விவசாயம் மேற்கொண்டுவந்தார்.

இந்நிலையில், கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் பெற்று ரணில் அரசாங்கம் ஆட்சியேறியதும் சாவகச்சேரி பிரதேசத்தில் தற்கொலைக் குண்டு அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டின்பேரில் முன்னாள் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி ராமை தம்பிலுவில் வைத்து பயங்ரவாதத் தடுப்புப் பிரிவினர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து விசாரணையின் பின்னர் அவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அவர் தொடர்ந்து வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, அவருக்கு வழங்கப்பட்ட 6 வருடகால தண்டனைக்காலம் முடிவுற்ற நிலையில், நேற்று முன்தினம் (20) அவர் மட்டக்களப்பு உயர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை நீதிபதி விடுதலை செய்துள்ளார்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் - ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

## தெஹியத்தகண்டியில் வைத்தியர் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்





(கனகராசா சரவணன்)

அம்பாறை தெஹியத்தகண்டி பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் வைத்தியர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் (20) வைத்தியசாலைக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம், அரச மருத்துவ அபிவிருத்தி சங்கம், அரச இலங்கை தாதியர் சங்கம், தாதியர் இயல் தொழில்நுட்ப சங்கம், துணை மருத்துவ அதிகாரிகள் சங்கம், வைத்திய நிபுணர்கள் சங்கம் ஒன்றிணைந்து சுகாதார சேவையாளர்களுக்கு எதிரான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுகாதாரத் துறையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பொலிஸார் தமது கடமையை சரியாக செய்யவேண்டும் என சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷம் எழுப்பி, சுமார் அரை மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து விலகிச்சென்றனர்.

# முன்னாள் அமைச்சர் மறைந்த மர்ஹூம் மஹ்ரூப்பின் 25ஆவது வருட நினைவு தினம் அனுஷ்டிப்பு





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் துறைமுகங்கள் கப்பல்துறை இராஜாங்க அமைச்சருமான காலஞ்சென்ற மர்ஹூம் எம்.ஈ.எச்.எம்.மஹ்ரூப்பின் 25ஆவது வருட நினைவு தின நிகழ்வும், துஆ பிரார்த்தனையும் நேற்று (21) காலை 7.30 மணிக்கு கிண்ணியா குறிஞ்சாக்கேணி தாருல் உலூம் ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப்பின் ஆலோசனைக்கமைய இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

1997.07.20ஆம் திகதி நிலாவெளி பகுதியில் எம்.ஈ.எச்.மஹ்ரூப் படுகொலை செய்யப்பட்டார். அவருடன் இன்னும் நான்கு பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்டு, இன்றுடன் (நேற்று) 25 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் முன்னாள் நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், கிண்ணியா மீனவர் சமாஜத்தின் தலைவர் எம்.பாயிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பின் பிரத்தியேகச் செயலாளர் சதாத் கரீம், மௌலவிமார்கள் உலமாக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கைபேசி பாவனையை தவிர்க்க கூறியதால் 15 வயது மாணவன் தற்கொலை முயற்சி

(அப்துல்சலாம் யாசீம்)

கையடக்கத் தொலைபேசியை பாவிக்க வேண்டாம், புத்தகத்தை எடுத்து படி என தாய் கூறியதால் 15 வயது சிறுவன் மாத்திரைகளை உட்கொண்ட சம்பவமொன்று திருகோணமலையில் பதிவாகியுள்ளது.

திருகோணமலை - கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்யாணபுர பகுதியில் நேற்று முன்தினம் (20) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இவ்வருடம் க/பொ/த சாதாரண தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவன் தொடர்ச்சியாக கையடக்கத் தொலைபேசியை பாவித்து வருவதாகவும், படிக்கின்ற நேரத்தில் படிக்குமாறு தாயார் கூறி தனது 15 வயது மகனை தாக்கியதாகவும் இதனையடுத்து மகன் வீட்டிலிருந்த மாத்திரைகளை உட்கொண்டதாகவும் தாயார் குறிப்பிட்டார்.

தாக்குதலுக்குள்ளான மகன் தனி அறைக்குள் உறங்கிக்கொண்டிருந்ததாகவும் பகல் சாப்பாட்டிற்காக சிறுவனை பார்த்தபோது வீட்டுக்குள் மயங்கிய நிலையில் இருந்ததாகவும் இதனையடுத்து மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசென்றதாகவும் தாய் கூறினார்.

மயக்கமுற்ற நிலையில் இருந்த சிறுவனை மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் கையடக்கத் தொலைபேசி பாவனை தொடர்பினால் சிறுவர்கள் அதிகளவில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வருவது அதிகரித்துள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலை சட்ட வைத்திய பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# வாகன இறுதி இலக்கத்தின் அடிப்படையில் வாழைச்சேனையில் எரிபொருள் பெற காத்திருப்பு




(மீராவோடை நிருபர்)

வாகன இறுதி இலக்க அடிப்படையில் நாடளாவிய ரீதியிலுள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 21ஆம் திகதியிலிருந்து எரிபொருள் விநியோகிக்கப்படுமென எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 3, 4, 5 ஆகிய இறுதி இலக்கங்கள்கொண்ட வாகனங்களுக்கு நேற்று (21) பெற்றோல் விநியோகிக்கப்படவிருந்த தால் குறித்த இலக்கங்களைக்கொண்ட வாகன உரிமையாளர்கள் பெற்றோலை பெற்றுக்கொள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று முதல் காத்துக் கிடக்கின்றனர்.


அந்தவகையில், வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்றைய தினம் பெற்றோல் வழங்கப்படுமென இறுதி இலக்கங்களைகொண்ட வாகன உரிமையாளர்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு




இதுவரை பெற்றோல் கிடைக்கவில்லை என்றும் கிடைத்தவுடன் முறையே விநியோகிக்கப்படும் என்றும் எரிபொருள் நிரப்பு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

## போடியார் புலம்பல்!



**தமிழ்க் கூட்டமைப்புக்குள குழப்பமாம் எண்டு கத அடிபடுது.**

**ஜனாதிபதி தேர்தலில டலஸை ஆதரிக்க வேணும் எண்டு சுமந்திரனும், சாணாக்கியனும், சம்பந்தரும் ஒத்தக்காலில நிண்ட விசயம் இப்ப அவங்களுக்க இருந்த எம்.பிமார் கதைக்கிறாங்க எலுவா?**

**எப்படியாவது புலிகளால ஆரம்பித்த கட்சிய உடைக்கோணும் எண்டதில கொழும்பு அண்ணனும், அவுஸ்திரேலியா தம்பியும் குறியாக இருக்கிறாங்க எண்ட விசயம் மாவையிட காதுக்கு போயித்தாம். பாப்பம் மறுகா என்ன நடக்கும் எண்டத..!**

# அல்-மினா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு



(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயின் ஏற்பாட்டில் கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்-மினா வித்தியாலய மாணவர்களுக்கு நேற்று (21) கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்-மினா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் எம்.எச்.அப்துல் ஹை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.முகம்மட் றியாஸ், சம்பு நகர் சிவில் பாதுகாப்புக் குழுவின் தலைவரும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான ஏ.எம்.எம்.சம்சுதீன், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.இன் தலைவர் எம்.ஐ.ஹாசீம் ஆகியோர் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகலாம். இவ்விடயத்தை கவனத்திற்கொண்டு கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவர்களின் கற்றல் நோக்கத்தை அடிப்படையாக வைத்து இத்திட்டம் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.


இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.



இந்நிகழ்வில் ஆசிரியர்களான எம்.ஏ.ஏ.அசீஸ், ஏ.சீ.எம்.பர்சான், ஜே.றிம்சான், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.ஜீ.ஹம்சார், ஏ.ஏ.எம்.அறூஸ், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. பதவி வழி உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# திருமலையில் வருடாந்த ஹஜ் விளையாட்டுப் போட்டி







(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மட்கோ மகாமாயபுர பிரதேசத்தில் வருடாந்த ஹஜ் விளையாட்டுப் போட்டிகளும் அல்-ஹுசைனியா விளையாட்டுக் கழகமும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டன.

நாட்டில் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ஏற்பட்டுவந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக, முஸ்லிம்கள் தமது பெருநாளை தமது இல்லங்களில் மாத்திரம் கொண்டாடி வருகின்ற நிலையில், அவர்களின் அந்த மன நிலையிலிருந்து மீண்டு வரும் நோக்கில் இந்த வருடம் புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஹஜ் பெருநாள் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

குறித்த போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், அல்-ஹுசைனியா விளையாட்டுக் கழகத்தின் உத்தியோகபூர்வமான ஆரம்ப நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

குறித்த பிரதேசத்தில் இன, மத, மொழி பேதம் இன்றி சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் குறித்த அல்-ஹுசைனியா விளையாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டதாகவும் இளைஞர்கள் இந்த ஸ்மார்ட் காலகட்டத்தில் தமது பொன்னான நேரங்களை வீணான வழிகளிலும், போதைவஸ்து பழக்கவழக்கங்களிலும் தமது வாழ்க்கையை சீரழித்துக்கொண்டிருக்கின்றனர்.

மேலும் குறித்த பிரதேசத்தில் இலைமறை காயாக இருக்கின்ற பல இளைஞர்கள் நமக்கான ஒரு களம் இல்லாது தடுமாற்றம் அடையும் நிலையில், குறித்த விளையாட்டுக் கழகத்தின் ஊடாக தமது திறமைகளை வெளிக்கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பம் அனைத்து இளைஞர் களுக்கும் கிடைக்கும் எனவும் குறித்த நோக்கில் குறித்த கழகம் உருவாக்கப்பட்டதாக கழகத்தின் அமைப்பாளரும் கழகத்தின் உத்தியோகபூர்வ பயிற்றுவிப்பாளருமான எஸ்.எவ.அமீர்டீன் தெரிவித்தார்.

மேலும் வெகு விரைவில் குறித்த அல்-ஹுசைனியா விளையாட்டுக் கழகத்தி னூடாக திருகோணமலையில் மாபெரும் உதைபந்தாட்ட சமர் ஒன்றும் ஆரம்பமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவு உற்பத்தியை ஊக்குவிக்க தம்பலகாமம் பத்தினிபுரம் விவசாயிகளுக்கு பயறு, கௌபி விதைகள் வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் பத்தினிபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான பயறு செய்கை மற்றும் கௌபி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (20) கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத்தில் இடம்பெற்றது.

“விரைவான உணவு உற்பத்தி” எனும் திட்டத்தின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட 15 விவசாயிகளுக்கான கௌபி விதைகளும் இதன்போது வழங்கப்பட்டன.

தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு உணவு விவசாய தாபனம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள பயறு செய்கை ஊக்குவிப்பு ஊடான விழிப்புணர்வும் இடம்பெற்றது. பயிர்ச்செய்கை தொடர்பான தெளிவுபடுத்தல்களை விவசாய போதனாசிரியர் அஸ்ஹர் கலந்துகொண்டு



தெளிவுபடுத்தினார்.

இதில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வீ.தங்கரூபன் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய குடியரசை ஆளப்போகும் சிங்கப்பெண் திரௌபதி முர்மு

- இந்தியாவின் 15ஆவது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும் முதல் பழங்குடியினப் பெண்; 25ஆம் திகதி பதவியேற்பு
- நாளை விடைபெறுகிறார் ராம்நாத் கோவிந்த்



இந்தியாவின் 15ஆவது ஜனாதிபதியாக திரௌபதி முர்மு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் நாளை மறுதினம் (24ஆம் திகதி) நிறைவடையவுள்ள நிலையில், புதிய குடியரசுத் தலைவராக எதிர்வரும் 25ஆம் திகதி திரௌபதி முர்மு பதவியேற்கவுள்ளார்.

தேர்தல் வெற்றியின் மூலம் திரௌபதி முர்மு இந்திய உயரிய அரசியலமைப்புப் பதவியை வகிக்கும் முதல் பழங்குடியினப் பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

**நாளை ராம்நாத் கோவிந்துக்கு பிரியாவிடை**

நாளை 23ஆம் திகதி தற்போதைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்திற்கு பிரியாவிடை அளிக்கப்படுகிறது. அந்த நிகழ்ச்சியில் துணை ஜனாதிபதி வெங்கையாநாயுடு, பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர். 25ஆம் திகதி புதிய குடியரசுத் தலைவராக திரௌபதி முர்வு பதவியேற்கவுள்ளார்.





குடியரசுத் தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் பா.ஜ.கவைச் சேர்ந்த பழங்குடியினப் பெண் திரௌபதி முர்மு, எதிர்க்கட்சிகளின் சார்பில் திரிணாமூல் காங்கிரஸைச் சேர்ந்த யஷ்வந்த் சின்ஹா ஆகியோர் போட்டியிட்டனர்.

டில்லியில் நாடாளுமன்றத்திலும், அனைத்து மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் திங்கட்கிழமை வாக்குப்பதிவுகள் நடைபெற்றன. மக்களவை மாநிலங்களவை ஆகியவற்றின் 771 உறுப்பினர்களும், மாநிலச் சட்டமன்றங்களின் 4ஆயிரத்து 25 உறுப்பினர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில், 99 வீதத்திற்கும் மேல் வாக்குகள் பதிவாகின.

மாநிலச் சட்டமன்றங்களிலிருந்து வாக்குப் பெட்டிகள் அனைத்தும் பலத்த பாதுகாப்புடன் டில்லியிலுள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்குக் கொண்டுவரப்பட்டன. நாடாளுமன்றத்தின் 63ஆவது அறையில் குடியரசுத் தலைவர் தேர்தல் வாக்கு எண்ணிக்கை முற்பகல் 11 மணிக்குத் தொடங்கின.

தேர்தல் அதிகாரியான மாநிலங்களவைச் செயலர், வாக்கு எண்ணும் அதிகாரிகள், வேட்பாளர்கள், அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், ஊடகச் செய்தியாளர்கள் மட்டும் வாக்கு எண்ணும் அறையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

முதலில் எம்.பிக்களின் வாக்குகள் எண்ணப்பட்டன. அகரவரிசைப்படி 10 மாநிலங்களின் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர், வாக்கு எண்ணிக்கை நிலவரங்களை ராஜ்யசபா பொதுச்செயலாளர் பிசி மோடி அறிவித்தார். அதன்படி, முதல்சுற்று வாக்கு எண்ணிக்கையில் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர் திரௌபதி முர்மு



அதிக வாக்குகளை பெற்று தொடர்ந்து முன்னிலை வகித்தார். இந்நிலையில், 2ஆம் சுற்று முடிவுகள் வெளியாகின. அதிலும் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர் திரௌபதி முர்மு தொடர்ந்து முன்னிலை வகித்தார்.

2ஆவது சுற்று முடிவில், திரௌபதி முர்மு 4இலட்சத்து 83ஆயிரத்து 299 வாக்குகளும், யஷ்வந்த் சின்ஹா ஒரு இலட்சத்து 89ஆயிரம் வாக்குகளும் பெற்றனர். தொடர்ந்தும் திரௌபதி முர்முவே முன்னிலையில் இருந்தார்.

திரௌபதி முர்முவின் வெற்றி நேற்று மதியவேளையிலேயே உறுதியாகியிருந்த நிலையில், அவரது சொந்த ஊரான ஒடிசா மாநிலத்தின் ராய்ரங்பூரில் வெற்றி கொண்டாட்ட நிகழ்வுகள் தயார் செய்யப்பட்டன.

அத்தோடு, பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்காக 50ஆயிரம் லட்டுகள் தயார் செய்யப்பட்டன. திரௌபதி முர்மு வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக அவரது சொந்த கிராமத்திற்கு அதை சுற்றியுள்ள பல்வேறு கிராமத்தினரும் ராய்ரங்பூருக்கு படையெடுத்தனர். தங்கள் பகுதியைச் சேர்ந்த பழங்குடியினப் பெண் இந்தியாவின் மிக உயரிய பதவியில் அமரவுள்ளது அப்பகுதி மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் அனைவரும் இணைந்து முர்முவின் வெற்றியை மாபெரும் ஊர்வலம் நடத்திக் கொண்டாட திட்டமிட்டு, ஒடிசா பழங்குடிகளின் பாரம்பரிய நடனக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். இதற்காக ஏராளமான நடனக் கலைஞர்கள் ராய்ரங்பூரை வந்தடைந்தனர். அதுமட்டுமன்றி, திரௌபதி முர்முவை வாழ்த்துவதற்காக பெரும் பதாகைகளும் தயார் செய்யப்பட்டன.

**பிரித்தானிய பிரதமர் பதவி**

## இறுதிக்கட்ட போட்டிக்கு முன்னேறினார் ரிஷி சுனக்



பிரித்தானிய பிரதமர் பதவிக்கான இறுதிக்கட்ட போட்டிக்கு இந்திய வம்சாவளி ரிஷி சுனக் முன்னேறினார்.

கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களிடையே நடைபெற்ற இறுதிக்கட்ட வாக்கெடுப்பில் ரிஷி சுனக் 137 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் 2ஆவது இடம் பிடித்த நிலையில், சர்வதேச வர்த்தக அமைச்சர் பென்னி மோர்டாண்ட் (Penny Mordaunt) போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இறுதிக்கட்டமாக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என 02இலட்சம் பேர் தபால் வாக்குகள் செலுத்தி பிரதமர் யார் என்பதைத் தெரிவு செய்யவுள்ளனர்.

# உலக செய்திகள்

## உலகளவில் 70 நாடுகளில் 14,000 பேருக்கு குரங்கு அம்மை தொற்று

உலகின் 70 நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவியுள்ள நிலையில், இதுவரை 14,000 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உலகளவில் பரவலாக குரங்கு அம்மை தொற்று கண்டறியப்படும் நிலையில், அது தொடர்பாக முக்கிய முடிவெடுக்க உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

கடந்த மே மாதம் முதல் தற்போது வரை சுமார் 70 நாடுகளில் 14ஆயிரம் பேருக்கு அந்நோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 23ஆம் திகதியன்று உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்ற நிலையில், நோய்ப்பாதிப்பு அதிகரிக்கும் சூழலில் மீண்டும் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நோய்ப்பரவல் தொடர்பான தரவுகளை ஆய்வு செய்யும் குழுவினர், அதனை கட்டுப்படுத்துவது குறித்த அறிவுறுத்தல்களை பரிந்துரைப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## உக்ரைனுடனான உறவை துண்டித்தது சிரியா




உக்ரைனுடனான தூதரக உறவை முறித்துக்கொள்வதாக சிரியா புதன்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இது குறித்து சிரியா வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், ''சிரியாவுடனான உறவை துண்டிப்பதாக உக்ரைன் அறிவித்திருந்தது. அதற்கு எதிர்வினையாக, அந்த நாட்டுடனான தூதரக உறவை சிரியா முறித்துக்கொள்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரியா உள்நாட்டுப் போரில் அந்நாட்டு ஜனாதிபதி அல்-அஸாத்துக்கு எதிராக ஐ.எஸ்., அல்-கொய்தா பயங்கரவாதிகள் மற்றும் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்கள் போரிட்டு கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியிருந்தனர்.

அதையடுத்து, அந்தப் போரில் அரசுக்கு ஆதரவாக ரஷ்யா கடந்த 2015ஆம் ஆண்டு களமிறங்கியது. அதன் பிறகு சிரியாவின் பெரும்பாலான பகுதிகளை அரசுப் படையினர் மீட்டனர். இதன் காரணமாக ரஷ்யாவுடன் சிரியா அரசு மிக நெருக்கமான உறவைப் பேணி வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதம் படையெடுத்த ரஷ்யா, அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் வசமிருக்கும் டொனட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ் பகுதிகளை தனி நாடுகளாக அங்கீகரித்தது. அதையடுத்து, சிரியாவும் அந்தப் பிராந்தியங்களை தனி நாடுகளாக அங்கீகரித்தது. அதனைக் கண்டித்து சிரியாவுடனான உறவை முறித்துக்கொள்வதாக உக்ரைன் அறிவித்தது.

## வரலாறு காணாத கடும் வெப்பத்தால் தவிக்கும் பிரிட்டன்

### உருகி ஊற்றிய ரயில்வே சிக்னல்; ரயில் போக்குவரத்து பாதிப்பு

### திடீரென தீப்பற்றியெரியும் கட்டடங்கள்



பிரிட்டனில் நிலவும் வரலாறு காணாத வெப்பம் காரணமாக ரயில்வே சிக்னல்கள் உருகி போனதால் ரயில் போக்குவரத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்நாட்டின் தேசிய ரயில்வே வெளியிட்டுள்ள அதிகாரபூர்வ ட்விட்டரில், வெயிலால் ரயில்வே சிக்னல்கள் உருகி கிடக்கும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், மக்கள் தங்கள் ரயில் பயணங்களை எச்சரிக்கையுடன் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பிரித்தானியாவில் 40டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகி வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.




இதேவேளை, பிரித்தானியாவில் அடுக்குமாடி கட்டிடத்தின் உச்சியில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, 25 தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ முழுவதும் அணைக்கப்பட்டது.

ஐரோப்பாவில் வரலாறு காணாத அளவுக்கு வெப்பம் வாட்டி வரும் நிலையில், கிழக்கு லண்டனிலுள்ள டவர் ப்ளொக் அடுக்குமாடி கட்டடத்தின் 17ஆவது மாடியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

உடனடியாக 25 தீயணைப்பு வாகனங்களில் சென்ற 125 தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை கட்டுப்படுத்தினர்.

## இலங்கையில் போராட்டங்கள் முடிவுக்கு வராது

**இந்திய முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு**



இலங்கை ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் போராட்டங்கள் முடிவுக்கு வராது என்று முன்னாள் இந்திய மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், ராஜபக்ஷ சகோதரர்கள் போலவே ரணில் விக்ரமசிங்கவும் இலங்கை மக்களிடையே செல்வாக்கற்றவராக இருக்கிறார். அவருக்கு எதிராகவும் போராட்டம் நடத்தப்படுகிறது.

இலங்கையின் ஜனாதிபதியாக ரணில் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் போராட்டங்கள் முடிவுக்கு வராது. ஒற்றுமை, அமைதியான சூழல் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தாது.

இலங்கையில் நிலவும் கொந்தளிப்பு மேலும் தொடரலாம், பொருளாதார நெருக்கடி சூழல் மேலும் மோசமடையலாம் என சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்று பதவி விலகுமாறு ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிப்போராடினர். போராட்டம் தீவிரமானதால் நாட்டைவிட்டு வெளியேறிய அவர், ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்தார். முன்னதாக, இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை அவர் கடந்த 13ஆம் திகதி நியமித்தார்.

இந்நிலையில், ஜூலை 20ஆம் திகதி நடைபெற்ற புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பில் இடைக்கால அதிபரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க 134 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

இதனிடையே, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதற்கும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

## உலகின் 250 முக்கிய நகரங்களை இணைக்கும் புதிய விமானப் போக்குவரத்தை தொடங்கிய சவூதி




உலகின் 250 முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில், சவூதி அரேபியா புதிய விமானப் போக்குவரத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.

அடுத்த எட்டு ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை மும்மடங்காக அதிகரிக்க 'விஷன் 2030' என்ற திட்டத்தை சவூதி அரசு அறிவித்துள்ளது.

இத்திட்டத்திற்கு ரியாத்திலுள்ள கிங் காலித் சர்வதேச விமான நிலையத்திலிருந்து முக்கியப் பங்களிப்பாக புதிய விமான சேவை அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2030ஆம் ஆண்டிற்குள் 10 கோடி சுற்றுலாப் பயணிகளை இலக்காகக்கொண்டு செயற்றிட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## 21.07.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 133 70 3 | 145 1783 |
| கனேடியன் டொலர் | 165 847 | 177 2783 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 2 | 44 520 |
| யூரோ | 252 4405 | 266 8657 |
| ஜப்பான் யென் | 1 4614 | 1 5674 |
| சிங்கப்பூர் டொலர் | 144 5347 | 155 0155 |
| ஸ்ரேலிங் பவுன் | 315 5568 | 332 4888 |
| சுவிஸ் பிராங்க் | 255 6 88 | 271 5487 |
| ஐ.அ.டொலர் | 247 2034 | 257 8076 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848 1876 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 1 60 |
| ஓமான் | ஓமான் றியால் | 828 28 3 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 7842 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 13 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 3534 |

# உலக உணவுத்திட்டப் பணிப்பாளருடன் வொஷிங்டனில் தூதுவர் கலந்துரையாடல்

### ஜனாதிபதியின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து பேச்சு



(நமது நிருபர்)

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, உலக உணவுத்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் பீஸ்லியை வொஷிங்டன் நகரில் நேற்றுமுன்தினம் (20) சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு வருகை தரவுள்ள டேவிட் பீஸ்லி, அந்த விஜயம் குறித்து விளக்கங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தில் அதிக பெரும்பான்மையுடன் தெரிவுசெய்யப்பட்டமை குறித்து பீஸ்லிக்கு விளக்கமளித்த தூதுவர் சமரசிங்க, உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளான உரம் மற்றும் ஏனைய விவசாய உள்ளீடுகள் தொடர்பில் உணவுப் பாதுகாப்புத் திட்டத்துடன் நெருங்கிப் பணியாற்ற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பீஸ்லி தனது வாழ்த்துகளை இதன்போது தெரிவித்துள்ளார். மேலும் இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதியை சந்தித்து முக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதா கவும் அவர் குறிப்பிட்டார்.

உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருடனான கலந்துரையாடலில் பிரதித் தூதுவர் ரோஹன அம்பகொல்ல, தூதரக முதன்மைச் செயலாளர் சத்துரி பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ரணிலுக்கு வாக்களிக்கவில்லை



**ரஞ்சித் மத்தும பண்டார**

புதிய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தோ அல்லது எதிர்க்கட்சிகளில் இருந்தோ ஓர் உறுப்பினர்கூட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றில் மக்களின் நிலைப்பாடுதானா வாக்கெடுப்பின்போது வெளிப்பட்டதென கேட்க விரும்புகிறேன்? 2019 மற்றும் 2020இல் இருந்த நிலைப்பாட்டிலிருந்து மக்கள் முற்றாக மாறிவிட்டார்கள். 2020இல் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு எதிராக மக்கள் போராடிக்கொண்டிருக்கும்போது, குறித்த உறுப்பினர்களினாலேயே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருடர்களை வெளியே விரட்ட வேண்டுமெனக் கோரியே மக்கள் போராடி வருகிறார்கள். ஆனால், இன்று அனைத்துத் திருடர்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதியாக ஒருவரை நியமித்துள்ளார்கள். இவர்கள் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கவே முற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். புதிய ஜனாதிபதி தெரிவின்போது, எமது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள் எனக் கூறப்படுகிறது.

ஆனால், அப்படி ஓர் உறுப்பினர்கூட அவருக்கு வாக்களிக்கவில்லை என்பதை நான் இவ்வேளையில் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். மேலும், எதிர்க்கட்சியிலுள்ள எந்தவொரு கட்சியினரும் அவருக்கு வாக்களிக்கவில்லை.

வாக்கெடுப்பினூடாக எமது பலம் மேலும் அதிகரித்துள்ளது என்றே கூறவேண்டும். 64 ஆக இருந்த எமது பலம் இன்று 82 ஆக உயர்வடைந்துள்ளது. 20ஆவது திருத்தத்திற்கு ஆளும் தரப்பில் 156 வாக்குகள் வழங்கப்பட்டன. ஆனால், நேற்றைய வாக்கெடுப்பின்போது 134 பேர் மட்டுமே வாக்களித்தனர். இதிலிருந்து அவர்களின் வீழ்ச்சியும், எமக்கான ஆதரவும் அதிகரித்துள்ளமையை புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும், வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை மீட்டெடுக்க நாம் எம்மால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளையும் செய்யத் தயாராகவே உள்ளோம். சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால், அது எவ்வாறு பயணிக்கப்போகிறது என்பதையே நாம் பார்க்கவேண்டும். எந்தத் தீர்மானமாக இருந்தாலும் கட்சியின் மத்திய குழு கூடியே முடிவுகளை எடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சீனாவின் உதவித்திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட அரிசி தொகை நாட்டை வந்தடைந்தது



சீனாவினால் வழங்கப்படும் 500 மில்லியன் யுவான் மனிதாபிமான உதவியின் கீழ் வழங்கப்படும் அரிசி தொகையில், இரண்டாவது தொகுதி நாட்டை வந்தடைந்துள்ளது.

அதற்கமைய, 500 மெற்றிக் தொன் அரிசி சீனாவினால் இலங்கைக்கு அனுப்பி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 16 மற்றும் 19ஆம் திகதிகளில் இந்த அரிசி தொகை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பாடசாலை உணவுத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள 7,900 பாடசாலைகளில் 1.1 மில்லியன் குழந்தைகளுக்கு இதுவரை 3,000 மெற்றிக் தொன் அரிசி கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சீனத் தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.



# புதிய ஜனாதிபதியின் தெரிவு சமகால அரசியலுக்கான தீர்வு



**ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி.**

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறுபது வீதமானோரின் ஆதரவைப் பெற்று புதிய ஜனாதிபதி தெரிவாகியிருப்பது, தாய்நாட்டின் கீர்த்தியை சர்வதேசத்தில் உயர்த்தியிருப்பதாக சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவானமை தொடர்பில் அவர் தெரிவித்துள்ள வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

தேவையான நேரத்தில் தகுதியான ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். மக்கள் பிரதிநிதிகளில் அறுபது வீதமானோர் புதிய ஜனாதிபதியை ஆதரித்துள்ளனர்.

பல இனங்களையும் பெரும்பாலான கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்களது ஆதரவும் அவருக்கு கிடைத்துள்ளது.


ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகவே, இதை, நான் பார்க்கிறேன். படுகுழிக்குச் சென்றுள்ள நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிமிர்த்த சர்வதேசத்தின் உதவிகளே தேவைப்படுகிறது.

இந்த நேரத்தில் ரணிலை ஜனாதிபதியாக நாடாளுமன்றம் தெரிந்திருப்பது, மிகத் தீர்க்கதரிசனமிக்க செயலாகும். சர்வதேசத்தில் புதிய ஜனாதிபதிக்குள்ள கீர்த்தியாலும், ஜனநாயகத்தில் ரணில் வைத்துள்ள நம்பிக்கையாலும் இந்த உதவிகளைப் பெறமுடியும்.

இனவாதிகள் மற்றும் அடக்குமுறையாளர்களின் முகாம்களுக்குள் சிறுபான்மைக் கட்சிகள் முடங்கியதன் நோக்கம் எங்களுக்குத் தெரியாத விடயமுமில்லை.

இந்தக் கூட்டத்தை தோற்கடித்து, அதிகாரத்துக்கு அலைவோருக்கு தக்க பாடம் புகட்டியுள்ளோம். மக்களின் பட்டினியைப் போக்குவது பற்றிச் சிந்திக்காமல், பழிவாங்கும் மனநிலையிலுள்ள தலைவர்களை மக்கள் அடையாளம் காணவேண்டும் என்றும் ஹாபிஸ் நஸீர் அஹமட் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# நாட்டை சரியாக வழிநடத்தக்கூடியவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க



**டக்ளஸ் தேவானந்தா**

அரசியல் மற்றும் பொருளா தார நெருக்கடியை நாடு சந்தித்துள்ள நிலையில், நாட்டை சரியான வழியில் நடத்திச் செல்லக்கூடியவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அனைவரும் கட்சி அரசியலுக்கப்பால் ஒருமித்து செயலாற்ற வேண்டிய காலகட்டம் தற்போது இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசியல் சூழலில் தமிழ் மக்களின் கௌரவமான எதிர்காலத்தை ஆழமாக ஆராய்ந்து பொருத்தமான தீர்மானங்களை எடுக்கவேண்டும் எனவும் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்கள் தமது தவறான தீர்மானங்களால் மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களில் அரசியல் பலத்தை வீணடித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வெல்கின்ற பக்கத்தில் அணிசேர்வது அரசியல் சாணக்கியமல்ல எனவும் தீர்மானித்த பக்கத்தை வெல்லச்செய்வதே அரசியல் சாணக்கியம் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# சஜித் அணியில் 14 பேர் ரணிலுக்கு வாக்களித்தனர்



**ஹரீன் பெர்னாண்டோ**

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் 14 உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்தனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவ்வாறு ரணிலுக்கு வாக்களித்தோரில் ஆறு சிங்கள உறுப்பினர்கள் எனவும் எண்மர் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உறுதியளித்தவர்கள் வாக்களிக்கவில்லை



**வாசுதேவ நாணயக்கார**

ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அலகப்பெருமவுக்கு வாக்களிப்பதாக உறுதியளித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்ததன் காரணமாகவே அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார் - என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இரகசிய வாக்கெடுப்பு காரணமாக யார் மாற்றுத்தரப்புக்கு வாக்களித்தார்கள் என கண்டறிய முடியவில்லை. ஆனாலும் பணக் கொடுக்கல் வாங்கல் அல்லது வேறு சலுகைகளுக்காக அவர்கள் விலைபோயிருக்கலாம் என நம்புகிறேன்.

டலஸ் அலகப்பெருமவுக்கு வாக்களிப்பதாக உறுதியளித்த அனைவரும் அதன்படி வாக்களித்திருப்பார்களாயின் 110இற்கும் அதிகமான வாக்குகளைப்பெற்று அவர் ஜனாதிபதியாகியிருப்பார். ஆனால், எமக்கு உறுதியளித்த உறுப்பினர்கள் மனதை மாற்றிக்கொண்டுள்ளனர்.

ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகள் நாட்டுக்குப் பொருத்தமானவை அல்ல. அவருக்கு சர்வதேச தொடர்புகள் இருப்பதாகக் கூறப்பட்டாலும் அவ்வாறு எதுவும் கிடையாது - என்றார்.

# நாடாளுமன்றத்தில் எமது கடமையை நாம் செய்தோம்



**தயாசிறி ஜயசேகர**

டலஸ் அலகப்பெருமவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்க தீர்மானித்திருந்தது. நாங்கள் எமது கடமையைச் செய்தோம். ஆயினும் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்தார்கள் - என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 பேரும் ஒரு நிலைப்பாட்டில் இருக்கவில்லை. ஒருசிலர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்துள்ளார்கள் என்பது வாக்கெடுப்பு முடிவுகளிலிருந்து தெளிவாகிறது. எமது கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு எதிராக மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்படும். சர்வகட்சி அமைப்பதே எமது நோக்கமாக இருந்தது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் நாங்கள் இந்த விடயத்தை தெரிவித்திருக்கின்றோம். நாட்டின் தற்போதைய பிரச்சினையில் இதனை செய்யமுடியுமாக இருந்தால் மிகவும் நல்லது.

நாட்டின் தற்போதைய நிலையில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்வதைவிட அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும் - என்றார்.

# அடக்குமுறைக்கு பொருத்தமானவர் ரணில்



**விமல் வீரவங்ச**

நாடாளுமன்றத்தின் ஊடாக புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அடக்குமுறைக்கு பொருத்தமானவர். அதனால்தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் அவரை நியமித்தனர் - என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தி, அடிபணிய வைக்கும் தந்திரத்தை ரணில் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டக்காரர்களை முடக்குவதற்கு ஏதாவது ஒருவழியில் ரணில் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடும். நாம் எப்போதும் ஜனநாயகத்துக்காக குரல் கொடுப்போம்.

எதிர்காலம் மிகவும் சவால்மிக்கதாகும். பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சியிலிருந்து நாம் எமது பணிகளை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ரணிலின் வெற்றி பெசிலின் வழிநடத்தல்



**ஜோசப் ஸ்டாலின்**

முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் வழிநடத்தலிலேயே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பெசிலின் அவதாரமாகவே ரணில் செயற்படுகிறார். பெசில் ராஜபக்ஷவின் தீர்மானத்துக்கமையவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவளித்தனர்.

ரணில் விக்ரமசிங்க, பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டமை தவறானதென நாடு முழுவதும் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. மக்களின் குரலுக்கு ரணில் செவிசாய்க்க வேண்டும்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை முடக்குவதற்கு ரணில் விக்ரமசிங்க முயற்சி செய்கிறார். அது ஜனநாயக விரோத செயற்பாடாகும். அவ்வாறு அவர் தொடர்ந்தும் செயற்படுவாராயின் வேலைநிறுத்தம் போன்ற பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரிடும் - என்றார்.

# ஒரு விக்கெட்டால் தவறிய பிரபாத்தின் உலக சாதனை



சுற்றுலா பாகிஸ்தான் அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் பிரபாத் ஜெயசூரிய இன்னுமொரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தால் முதல் வீரராக மிகப்பெரிய உலக சாதனையை படைத்திருப்பார். ஆனால், அந்த சந்தர்ப்பம் கைநழுவிப்போனது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியானது இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. நேற்று முன்தினம் நிறைவுக்குவந்த முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜெயசூரிய மொத்தமாக 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய பிரபாத் ஜெயசூரிய, தனது முதல் இரண்டு டெஸ்டில் 3 ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இலங்கை வீரர் என்ற சாதனையை படைத்தார். மேலும் குறித்த சாதனையை நிகழ்த்திய உலகின் 8ஆவது வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். அண்மையில் ஆஸி. அணியுடன் நிறைவுக்கு இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் முறையாக இலங்கை அணியில் அறிமுகம் பெற்ற பிரபாத், முதல் இன்னிங்ஸில் 118 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும், 2ஆவது இன்னிங்ஸில் 59 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும், பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இன்னிங்ஸில் 62 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

அந்தவகையில் 2ஆவது இன்னிங்ஸில் மேலும் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினால், முதல் இரண்டு டெஸ்டில் 4 ஐந்து விக்கெட்டுகளை எடுத்த உலகின் முதல் வீரர் என்ற உலக சாதனையை படைப்பாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 4 விக்கெட்டுகளை மட்டுமே அவர் வீழ்த்தியதால் உலக சாதனை படைக்கும் வாய்ப்பு நழுவியது.

# தோல்வியால் மூன்று இடங்கள் சரிந்த இலங்கை அணி


பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி, ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 3ஆவது இடத்திலிருந்து 6ஆவது இடத்துக்கு சரிந்தது.

நேற்று முன்தினம் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நிறைவுக்கு வந்த முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. இன்னுமொரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில், பாகிஸ்தான் அணி தொடரில் முன்னிலை வகிக்கிறது.

முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணி 54.17 வெற்றி சதவீதத்துடன் 3ஆவது இடத்திலும், பாகிஸ்தான் அணி 52.38 வெற்றி சதவீதத்துடன் 4ஆவது இடத்திலும் காணப்பட்டது. நேற்று முன்தினம் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி 48.15 வெற்றி சதவீதத்துடன் 6ஆவது இடத்திற்கு சரிந்தது.

2021 – 2023 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி இதுவரை 9 போட்டிகளில் விளையாடியுள்ளது. அவற்றில் 4 போட்டிகளில் வெற்றியீட்டி, 4 போட்டிகளில் தோல்வியைத் தழுவியுள்ளது. இதில் ஒரு போட்டியை சமநிலை செய்துள்ளது. வெற்றியின் மூலம் 4ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் அணி, 58.33 என்ற வெற்றி சதவீதத்துடன் 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தற்போதுள்ள புள்ளிப் பட்டியலின் அடிப்படையில் 71.43 என்ற வெற்றி சதவீதத்துடன் தென்னாபிரிக்கா அணி முதலிடத்தில் நீடிக்கிறது. 70 என்ற வெற்றி சதவீதத்துடன் அவுஸ்திரேலிய அணி 2ஆம் இடத்தில் காணப்படுகிறது.




| COUNTRY | PCT % |
|---|---|
| SOUTH AFRICA | 71.43 |
| AUSTRALIA | 70.00 |
| PAKISTAN | 58.33 |
| INDIA | 52.08 |
| WEST INDIES | 50.00 |
| SRI LANKA | 48.15 |
| ENGLAND | 33.33 |
| NEW ZEALAND | 25.93 |
| BANGLADESH | 13.33 |

# முதல் ஓவரிலேயே முதல் வீரராக ஹெட்ரிக் சாதனை படைத்த பிரேஸ்வல்



நியூசி லாந்து கிரிக்கெட் அணியின் இளம் சகலதுறை வீரர் மைக்கல் பிரேஸ்வல், இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் தனது முதலாவது ஓவரில் ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் மைக்கல் பிரேஸ்வல் இந்த சாதனையை நிகழ்த்தினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து அணி 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியை பெற்றுக்கொண்டது.

தனது முதல் போட்டியில் பிரேஸ்வல் ஓவர்களை வீசாத நிலையில், இந்தப் போட்டியில் முதன்முறையாக பந்துவீச அழைக்கப்பட்டார். 14ஆவது ஓவரை வீசிய அவர், மார்க் அடைர், பெரி மெக்கார்த்தி மற்றும் கிரைக் யங் ஆகியோரை ஆட்டமிழக்கச்செய்து தன்னுடைய முதல் ஓவரிலேயே ஹெட்ரிக் விக்கெட்டுகளை கைப்பற்றிய முதல் வீரர் என்ற சாதனையை பதிவுசெய்தார்.

மேலும் நியூசிலாந்து அணிக்காக இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் ஹெட்ரிக் விக்கெட்டுகளை கைப்பற்றும் மூன்றாவது வீரர் என்ற சாதனையையும் படைத்துக்கொண்டார்.

# 19ஆவது ஆசிய விளையாட்டு விழா 2023 செப்டம்பரில் ஆரம்பம்




சீனாவிலுள்ள ஹாங்சோ நகரில் நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட 19ஆவது ஆசிய விளையாட்டு விழாவானது எதிர்வரும் 2023 செப்டெம்பர் 23ஆம் திகதிமுதல் ஒக்டோபர் 8ஆம் திகதிவரை நடைபெறுமென ஆசிய ஒலிம்பிக் பேரவை அறிவித்துள்ளது.

ஆசிய விளையாட்டு விழா சீனாவில் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை நடைபெறவிருந்தது. எனினும், சீனாவில் வேகமாகப் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாகவும், ஆசிய விளையாட்டு விழா நடைபெறவிருந்த ஹொங்சோ நகரத்தில் பல மாதங்களாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதன் காரணமாகவும் ஆசிய விளையாட்டு விழாவை அடுத்த ஆண்டு வரை ஒத்திவைப்பதற்கு போட்டி ஏற்பாட்டுக் குழுவும், ஆசிய ஒலிம்பிக் பேரவையும் நடவடிக்கை எடுத்திருந்தன.

இந்நிலையில், ஒத்திவைக்கப்பட்ட ஆசிய விளையாட்டு விழா 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் திகதிமுதல் ஒக்டோபர் 8ஆம் திகதிவரை சீனாவிலுள்ள ஹொங்சோ நகரில் நடைபெறுமென ஆசிய ஒலிம்பிக் பேரவை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ஒலிம்பிக்கிற்கு அடுத்தபடியாக அதிகளவான வீரர்கள் பங்குபற்றுகின்ற உலகின் இரண்டாவது மிகப்பெரிய விளையாட்டு விழாவாக ஆசிய விளையாட்டு விழா விளங்குவதுடன், இதில் சுமார் 46 நாடுகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2023ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டு விழா முடிந்த அடுத்த 8 மாதங்களில் 2024 பரிஸ் ஒலிம்பிக் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'தாம் ஓரினச்சேர்க்கையாளர்' – வெளிப்படையாக அறிவித்த டென்னிஸ் வீராங்கனை



உலக டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் 12ஆவது இடத்தில் காணப்படும் 25 வயதான டாரியா கசட்கினா தாம் ஓரினச்சேர்க்கையாளர் என தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் ஓரினச்சேர்க்கைக்கு எதிராக கடந்த 2013ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஓரினச்சேர்க்கை இயற்கையை மீறிய உறவு. இவை அனைத்துக்கும் தடை விதிக்க சட்டம் தற்போது இயற்றப்படவிருக்கிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யாவின் உதைபந்து வீராங்கனை நடியா, தாம் ஓரினச்சேர்க்கையாளர் என்று வெளிப்படையாக அறிவித்தார்.

இதனையடுத்து தற்போது டாரியா கசட்கினாவும் தாம் ஓரினச்சேர்க்கையாளர் என்பதை அறிவித்து தனது காதலியின் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- இதில் அமைதியை விரும்புங்கள். அது மட்டும்தான் முக்கியம். மற்றதையெல்லாம் விட்டுத் தள்ளுங்கள். சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளை பேசி அதற்கு ஆதரவளிக்கும் முக்கிய நபராக விளையாட்டுத்துறை வீரர்கள் விளங்குகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

டாரியாவின் காதலி நட்டாளியா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற கேப்டன் வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# சேனையூர் ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகம் சம்பியன்



(கிண்ணியா நிருபர்)

மூதூர் கிரிக்கெட் சபை நடத்திய மூதூர் பிரதேசத்தில் காணப்படும் 22 அணிகள் உள்ளடங்கிய இருபதுக்கு 20 கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் சேனையூர் ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகம் மற்றும் மூதூர் இலவன் பவர்ஸ் அணிகள் அண்மையில் பலப்பரீட்சை நடத்தின. இறுதியில் சேனையூர் ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகம் 28 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனானது.

# வீட்டிற்கு அனுப்பப்பட்ட அவுஸ்திரேலிய நீச்சல் வீரர் கூப்பர்

(ரமணி)

அவுஸ்திரேலிய ஆண்கள் 50 மீற்றர் பேக்ஸ்ட்ரோக் தேசிய சாதனை படைத்த ஐசக் கூப்பர் பேர்மிங்காம் 2022 கொமன்வெல்த் விளையாட்டுப் பயிற்சி முகாமிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டார். 'மருந்து பயன்பாடு உட்பட சில நல்வாழ்வு சவால்கள்' காரணமாக போட்டியிலிருந்து விலக்கப்பட்டார்.

டோக்கியோ 2020 ஒலிம்பிக்கில் கலப்பு 4x100 மீற்றர் கலப்பு ரிலே ரிலேயில் அவுஸ்திரேலியாவின் வெண்கலப் பதக்க குழுவில் கூப்பர் இடம்பெற்றார். 18 வயதான இவர், மே மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலிய தேசிய சம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான 50 மீ. மற்றும் 100 மீ. பேக்ஸ்ட்ரோக்கில் தங்கம் வென்றார், மேலும் ஆடவருக்கான 50 மீ. பட்டர்பிளை பிரிவில் வெண்கலம் வென்றார். அவரது 24.44 விநாடிகள் அவுஸ்திரேலிய தேசிய சாதனையாக இருந்தது.

கூப்பர் பிரெஞ்சு நகரமான சார்ட்ரெஸில் ஒரு குழு பயிற்சி முகாமின் ஒரு பகுதியாக இருந்தார், ஆனால், நீச்சல் அவுஸ்திரேலியா ஒழுக்கக் காரணங்களுக்காக அவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டதாக அறிவித்தார். "மருந்துகளின் பயன்பாடு உட்பட சில நல்வாழ்வு சவால்களைத் தொடர்ந்து டொல்பின்ஸ் பயிற்சி முகாமிலிருந்து கூப்பர் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்" என்று ஆளும் குழு தெரிவித்துள்ளது.

ஆண்களுக்கான 50 மீ., 100 மீ. பேக்ஸ்ட்ரோக், 50 மீ. பட்டர்ஃபிளை மற்றும் 50 மீ. ஃப்ரீஸ்டைல் ஆகிய போட்டிகளில் கூப்பர் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவிருந்தார். அவுஸ்திரேலியாவின் தற்போதைய ஆண்களுக்கான எஸ்9 100 மீ. ஃப்ரீஸ்டைல் மற்றும் எஸ்.பி7 100 மீ. பிரஸ்ட் ஸ்ட்ரோக் கொமன்வெல்த் கேம்ஸ் சாம்பியனான டிம் டிஸ்கனும் பேர்மிங் காம் 2022 இலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

